மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 6 சுற்றம் : 12 / டிசம்பர் 2018 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



# கசா புயலால் பேரிழப்பு



## தமிழக முதல்-அமைச்சரின் மருத்துவ காப்பீடு ரூ. 5 லட்சமாக உயர்வு




22.11.2018அன்று சென்னை மேற்கு மாம்பலம் சந்திரசேகர் திருமண அரங்கில் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் எழுதிய "தமிழன் எதிரி தமிழன்" பெண்பா ஆகிய நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. தமிழர்தேசிய இயக்கத்தின் தலைவர் திரு. பழ நெடுமாறன் , இயக்குநர் புகழேந்தி தங்கராசு, அமுதசுரபி ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன், வழக்கறிஞர் த. பானுமதி, எழுத்தாளர் சூரிய தீபன் (பா. செயப்பிரகாசம்), கவிஞர் ஜெயபாஸ்கரன் உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினார். முற்றம் மாத இதழின் ஆசிரியர் விசவனூர் வே. தளபதி அவர்கள் நிகழ்வை தொகுத்து வழங்கினார்.



தமிழர் ஆன்மவியல் அறக்கட்டளை நிறுவனர் பேராசிரியர் முனைவர் மு. தெய்வநாயகம் அவர்களை செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. விசவனூர். வே. தளபதி சந்தித்தார். அருகில் திரு. சாம் இரமேஷ், திரு. இருதயராஜ், திரு. சந்திரபாபு ஆகியோர்.

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly December 2018

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**எஸ்தர்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை- 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

கசா புயலால் பேரிழப்பு (தலையங்கம்)........ 4

தமிழரின் வேளாண் தொழில்நுட்பங்கள்
– சி.நீனு........ 6

நீளும் நீட் தேர்வு........ 10

எனது பார்வையில் ம.செ.
– பீம.பெருமாள்........ 11

புலியுடை தரித்த தமிழ் (கவிதை)
– கவிபாஸ்கர்........ 13

மேற்குத் தொடர்ச்சி மலையைக் காப்போம்........ 15

மோடி முதலாளிகளின் முகமூடி
–சைதை மணிமாறன்........ 21

பத்திரிகை மீது காழ்ப்புணர்ச்சிக் கூடாது
உயர்நீதிமன்ற உத்தரவு........ 23

ராஜீவ் காந்தியை விடுதலைப்புலிகள் கொல்லவில்லை
– விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சட்டத்துறை ........24

எம்பி. சீனிவாசனின் வழித்தோன்றல் இசையமைப்பாளர் தினா
– இமயவரம்பன்........ 28

2021 ஆம் ஆண்டு விண்வெளிக்கு மனிதனை அனுப்புவோம்
– இஸ்ரோ தலைவர் கே. சிவன் பேட்டி........30

அறிஞர் அண்ணாவும் நானும்
முன்னாள் தமிழக முதல்வர்பெரியவர் பக்த வச்சலம் அவர்கள்........ 31

ஸ்டெர்லைட் ஆலை மீண்டும் இயக்க அனுமதியா?........ 33

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

*– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram” என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# கசா புயலால் பேரிழப்பு



இயற்கைப் பேரிடர்கள் தொடர்ந்து தமிழகத்தை வீழ்த்திக் கொண்டே இருக்கின்றன. உலகமே இயற்கைக்கு எதிராய் செயல்பட்டுக் கொண்டிருப்பதன் விளைவாகவேதான் இந்தப் பேரழிவுகள் தொடரு கின்றன என்பது ஆய்ந்தறிந்த அறிஞர்களின் கூற்றாக இருக்கிறது. உலகம் ஒன்று, அதில் இருக்கிற எல்லா நாடுகளும் உலகத்தின் உறுப்புகள் என்பதை மறந்து, அல்லது மற்ற நாடுகள் எக்கேடு கெட்டால் என்ன என்ற மன மிதப்பில் வல்லரசுகள் இயற்கைக்கு எதிரான செயல்களைச் செய்வதால் உலகெங்கம் இவ்விதமான பேரிடர்கள் நடக்கின்றன.

தமிழகத்தின் நெற்களஞ்சியத்தை சின்னாபின்னப் படுத்தியிருக்கிறது கசா புயல். தமிழக அரசு, புயல் வரப்போகிறது என்பதறிந்து பல முன்னேற்பாடுகளைச் செய்தது பாராட்டத்தகுந்தது என்றாலும், புயலின் அடங்கலுக்குப் பின் ஏற்பட்டி ருக்கிற அழிவுகளை சீர் செய்வதில் தோல்வியைத்தான் கண்டிருக்கிறது. பல சிற்றூர்களுக்கு இன்னும் மின்சாரம் தர இயலாத அரசாக செயல்பட்டுக் கொண்டி ருக்கிறது?.

கசா புயலில் சிக்கிச் சீரழிந்தவர் களுக்கு சமுதாயம், தமிழக அரசு, நடுவண் அரசு, தொண்டு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் என்ன செய்தன என்று நாம் ஆராய்ந்திட ஆரம்பிம்பிக்கும் போது நிறைவும் சோகமும் ஊடாடுகின்றன. தமிழக அரசு ஓரளவிற்கு செய்து கொண் டிருக்கிறது. நடுவண் அரசு எப்போதுமே

தமிழகத்தை மாற்றாந்தாய் மனப்பான்மை யுடன்தான் பார்க்கிறது. பதினைந்தா யிரம் கோடி கேட்டால் நூற்றைம்பது கோடி போதும் என்றுதான் நடுவண் அரசு நினைக்கிறது. நடுவண் அரசு, தமிழகத்தை எந்த நாளிலும் இந்தியாவின் ஒரு மாநிலம் என்று உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை. நடுவண் அரசில் வீற்றிருக்கி றவர்களின் கட்சியில் இருக்கிற இங்குள்ள தலைவர்கள் எதையாவது பேசி சமாளிக்கத் துடிக்கின்றனர்.

அரசியல் கட்சிகள் தங்களால் இயன்ற அளவிற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவு கின்றன. அரசியல் வாதிகள் நேரில் சென்று, அழிவுக்குள்ளானவர்களைப் பார்த்து ஆறுதலும் சொல்கின்றனர். தொண்டு நிறுவனங்களைப் பொறுத்தவரை இப்புயலில் அவர்களது செயல்பாடுகள் முன்பு இருந்ததைப் போல் இல்லை என்பதே நோக்கர்களின் கருத்தாக இருக்கிறது. காரணம், நடுவண் அரசு தொண்டு நிறுவனங்கள் மேல் எடுத்த நடவடிக்கைகள்தான்.

ஆகவே பெருமளவில் தொண்டு நிறுவனங்கள் செயல்படவில்லை. வெளிநாடு களில் இருந்து உதவிகளையும் பெற இயலவில்லை. கசா புயல் அழிவின் மீட்புக்கு மாபெரும் ஒரு பின்னடைவு என்ற நிலை, நடுவண் அரசு செயல் படவிடாமல் கொடுத்த கட்டுப்பாடுகள்தான் என்கி றார்கள் தொண்டு நிறுவனத்தின் மூலம் பேரிடர்களைச் சந்தித்து மீட்புக்காக சிறப்பாகச் செயல்பட்ட சமுதாயச் செயற் பாட்டாளர்கள்.

இந்தப்புயலில் மற்றுமொரு வேதனைக்குரிய செய்தியும் உண்டு. சாதி பார்த்து உதவிகள் செய்யப் பட்டன. சில சாதிக்காரர்கள் இருக்கும் பக்கமே உதவிகள் செல்லவில்லை என்பதுதான் அது. இது சமுதாயத்தை படுகுழிக்குள் தள்ளும் மோசமான செயலாகும். இந்தச் சாதிக்கும் மட்டும்தான் உதவி என்ற நிலையும் இருந்ததாகத் தெரிகிறது. மனிதம் தன்னை இழந்து கொண்டிருக்கிறதோ என்ற அச்சம் நல்ல மனம் படைத்தவர்கள் நடுவில் தோன்றி மனதை கனக்க வைத்துவிட்டது. இவை எல்லாவற்றையும்விட இந்திய தலைமை அமைச்சர் இது குறித்து எந்த ஒரு கவனமும் கொள்ளாதது மிகவும் வேதனையான செய்தி.

தமிழர்கள் சோதனைகளிலே வாழ்ந்தவர்கள், வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இச்சோதனை யிலிருந்தும் மீள்வார்கள் சாதி, மதம் கடந்து தமிழர்களாக மீள்வார்கள் என்பது மட்டும் என்றென்றும் நிலை நிற்கக்கூடிய ஒரே ஒரு உண்மை. ●









# தமிழரின் வேளாண் தொழில்நுட்பங்கள்!

உலகின் தொன்மையான நாகரிகங்களில் ஒன்றான தமிழர் நாகரிகம், வேளாண்மைக்கு முதன்மை இடம் அளித்தது. அரசர் முதல் கடைநிலை மாந்தர் வரை அனைவரும் வேளாண்மை பாதுகாப்பு என்ற கருத்தில் உறுதியாக இருந்தனர். இதனால், பயிர் விளைச்சலை அதிகரிப்பதற்கான பல்வேறு தொழில்நுட்பங்களைக் கண்டுபிடித்தனர். இந்தத் தொழில் நுட்பங்கள் தமிழ் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக சங்க இலக்கியங்களில் இப்பதிவுகள் அதிகமான இருப்பதைக் காண முடிகிறது. மேலும், சங்கம் பாடல்களில் உள்ள பயிர்த் தொழில் நுட்பங்கள் இன்றைய விவசாய நெருக்கடிகளைத் தீர்க்கும் வழிமுறைகளைக் கொண்டுள்ளன.

பசுமைப் புரட்சிக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யும் அனைவரும் மரபுசார்ந்த தமிழக வேளாண் தொழில்நுட்பங்களைக் கேலி செய்யும் வழக்கம் உள்ளது. இந்தியா முழுக்க பசுமைப் புரட்சிக்கு ஆதரவான கருத்து உருவாக்கப்பட்டதில் உள்ளூர் மரபு சார்ந்த தொழில் நுட்பங்களைக் குறைகூறும் வழக்கம் முக்கியப் பங்கு வகித்தது. இன்றுவரை இந்தப்போக்கு நிலவுகிறது. தமிழகத்தில் பசுமைப் புரட்சி ஏற்படுத்திய மாற்றங்கள் நம்ப இயலாத அளவு மோசமானவை. ஏறத்தாழ 3 ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழர்கள் கடைபிடித்து, மேம்படுத்தி வந்த எண்ணற்ற வேளாண் தொழில்நுட்பங்களை 60 ஆண்டு களிலேயே ஒழித்துக் கட்டிவிட்டது பசுமைப் புரட்சி.

சங்ககால விவசாயத்தின் சிறப்பு, நிலத்தை வகைப்படுத்திப் பிரித்ததுதான். மலை (குறிஞ்சி), காடு (முல்லை), ஆற்றோரச் சமவெளி (மருதம்) ஆகிய மூன்று வகை நிலங்களிலும் பயிர்த்தொழில் செய்யப்பட்டது. இந்த மூன்று வகை நிலங்களுக்கும் என தனித்தனியான தொழில்நுட்பங்கள் இருந்தன. தமிழ்ச் சமூகத்தின் இலக்கணத்தைத் தொகுத்த



தொல்காப்பியர், ஒரு நிலத்திற்கான பயிர்களை மற்ற நிலத்தில் செய்வதை 'மயக்கம்' என்றார். அதாவது, முறை தவறிய செயல் என்றார். இந்தக் கருத்தின் பின்னே, சூழலியல், மண்ணியல், தாவரவியல் ஆகிய அறிவியல் துறைகள் குறித்த அறிவு உள்ளது.

குறிப்பிட்ட நிலத்தில் நீர்ப்பிடிப்புத் தன்மை, சத்து, தட்ப வெப்பம், மழை அளவு, நீர் இருப்பு உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில்தான் அந்த நிலத்தில் இயற்கையான தாவரங்கள் செழித்து வளர்கின்றன. இதுவே இயற்கை நியதி. இந்த விதிக்குப் புறம்பாக, அந்நிலத்திற்குப் பொருத்தமில்லாத பயிர்களைப் பயிரிட்டால், அது கால ஓட்டத்தில் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதை சங்ககாலத் தமிழர்கள் அறிந்து வைத்திருந்தனர்.

நெல் விவசாயத்தை எடுத்துக் கொள்வோம். மலை, ஆற்றோரச் சமவெளி ஆகிய இர நிலங்களிலும் நெல் வேளாண்மை செய்யப்பட்டது. இவை தவிர, கடலோரக் கழிமுகங்களிலும் காடுகளின் ஓரங்களிலும் கூட நெல் விளைவிக்கப்பட்டதற்கான குறிப்புகள் உள்ளன. இவற்றைப் பொது விதிகளாக எடுத்துக் கொள்ள முடியாது. பெரும்பாலான நெல் விவசாயம் ஆற்றோரங்களிலும் குறைந்தளவு மலைகளிலும் நிலவும் குளிர், மித வெப்பம் ஆகியவற்றைத் தாங்கி வளரும் திறன் கொண்டவை. மலைநெல் என்ற வகையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். ஆற்றங்கரைச் சமவெளிகளில் பயிரிடப்பட்ட நெல் வகைகள், கடும் வெப்பம், வெள்ளம் ஆகியவற்றைச் சமாளித்து வளருபவை. செந்நெல், வெண்ணெல் உள்ளிட்ட பல வகைகள் மருத நிலத்துக்கென இருந்தன.

இவைதவிர, பிற நிலங்களில் நெல் விவசாயம் செய்வது முறையற்றது அல்லது சாத்தியக் குறைவானது என்பதைப் பல்வேறு புலவர்கள் வலியுறுத்தினர். 'புன்புலச் சீறும் நெல்விளை யாதே' என்கிறது புறநானூற்றுப் பாடல் (328). அதாவது, புன்செய் நிலத்தில் நெல் விளையாது என்பது இதன் பொருள். நெல்லுக்கு நீர் அதிகத் தேவை என்பதாலும் பிற சூழலியல் காரணிகளையும் கணக்கில் கொண்டு இவ்வாறு கூறப்பட்டது. ஆடு மாடு மேய்த்தல் தொழில் செய்தவற்குரிய முல்லை நிலத்தில் எந்தெந்தப் பயிர்கள் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது மற்றொரு பாடல்.

'வரகு, தினை, கொள்ளு, அவரை இந்த நான்கும் இல்லாமல் பிற உணவுப் பயிர் இல்லை' என்பது அப்பாடல் (புறம் 355) பயிரிடும் முறையிலும் நிலத்துக்குத் தகுந்த நுட்பங்கள் கடைபிடிக்கப்பட்டன. மலைச் சாரலில் பயிர் செய்வது பற்றிய குறிப்பு நற்றிணையில் உள்ளது (209). மலைவாழ் மக்கள், மழைக் காலத்திற்கு முன், தமது தோட்டங்களின் எல்லைகள் விரிவுபடுத்தினர். அதாவது, தோட்டத்தின் வேலிக்கு வெளியே உள்ள நிலத்தையும் பயன்படுத்தி வேலிக்குள் கொண்டு வந்தனர். மழை பெய்யும் முன், காற்றில் ஈரப்பதம் அதிகரித்ததும் மண் உழவுக்கு ஏற்ற பதத்திற்கு வந்துவிட்டது. ஆகவே, மழைக்கு முன்னே, நிலத்தை உழுதனர். இந்தப் பதம் 'தனி பதம்' எனப்பட்டது. 'தனி' என்பதற்கு, குளிர், மெல்லிய தூறல், மேகமூட்டம் ஆகிய அர்த்தங்கள் உள்ளன. மழை பெய்து மண்ணில் நீர்த் தன்மை அதிகரிக்கும் முன், தனி பதம் பார்த்து விதைத்துவிட வேண்டும் என்பதே இதில் கவனிக்கத்தக்க நுட்பம்.

உழுத பிறகு, குறைந்த விதைகளை அதிக இடைவெளி விட்டு தூவினர். இதன் பலனாக, பயிர்கள் செழிப்புடன் வளர்ந்து அதிக விளைச்சல் கிடைத்தது. இந்த நுட்பம், 'சிலவித்து அகல விட்டு பலவிளைந்து' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முறையே இன்று ஒற்றை நாற்று நடவு முறை எனப்படுகிறது. இன்றும் தமிழக மலைக் கிராமங்களில் இந்த முறைப்படி பயிர் செய்கின்றனர். மருத நில நெல் விவசாயத்துக்கென ஏராளமான முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. அந்த முறைகள் இன்றைய தேவைகளுக்கும் தீர்வாக அமைகின்றன. சிலவற்றைக் காண்போம்.

அதற்கு முன் மருத நில விவசாயத்தின் அடிப்படைகளைப் புரிந்து கொள்வோம். மருதநிலம் ஆற்றுச் சமவெளி என்பதால், ஆற்று நீரின் வரத்து வயல்களுக்கு அதிகமாக இருந்தது. மேலும், அக்காலத்தில் ஆற்று நீரை வயல்களில் பாய்ச்சுவதற்கான நீர் மேலாண்மை முறைகள் இப்போதைய முறைகளைக் காட்டிலும் வலுவாகவும் இயற்கையின் இயல்புகளுக்கு நெருக்கமானவையாகவும் இருந்தன. பயிர்த் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ற விதத்தில், ஆற்று நீரை அக்கால அரசாங்கம் முறைப்படுத்தி இருக்க வேண்டும். இப்போது உள்ளது போல், நீரின் வரத்துக்குத் தகுந்தாற்போல தண்ணீர் திறப்பு என்ற நிலை அன்று இல்லை எனத் தோன்றுகிறது. மாறாக, தேவைக்கு ஏற்ற தண்ணீர் திறக்கப்பட்டது. அல்லது, தண்ணீர் கிடைக்கும் அளவுக்கு ஏற்ற முறையில் விவசாயம் செய்யப்பட்டது.

மருத நிலத்தின் நெல் வயல்கள் எப்படி இருந்தன எனப் பார்ப்போம்.

1. நெல் வயல்களில் மழை பெய்தபோது, கெண்டை மீன்கள் துள்ளிக் குதித்தன. (புறம் 287)

2. நெல் வயலின் அடியில் மீன்கள் இருந்தன. நீர் மட்டத்தில் குவளை மலர்கள் பூத்திருந்தன. அதற்கும் மேலே நெல் விளைந்திருந்தது. (புறம் 396)

3. நெல் வயலில் பயிர்கள் உயர்ந்து வளர்ந்திருந்தன. அந்தப் பயிர்களின் உச்சியில் பறவைகள் கூடு கட்டியிருந்தன. அறுவடைக்குச் சென்ற உழவர்கள் பறவைகளுக்குச் சேதம் ஏற்படக் கூடாதென்ற கவலையுடன், அவை பறந்து செல்லும்படி ஒலி எழுப்பினர். இந்த ஓசையைக் கேட்டு, வயல்களைச்



சுற்றி இருந்த மூங்கில் காடுகளில் இருந்த தேனீக்கள், தேனடையை விட்டுப் பறந்தன. சுற்றி இருந்த மக்கள் தேன் வடித்துக் கொண்டனர். (புறம் 348)

மேற்கண்ட மூன்று காட்சிகளும் மூன்று வகை நெல் பயிர் முறைகளைக் கொண்டுள்ளன.

முதல் வகை, வயலில் ஆற்று நீரைப் பாய்ச்சி மீன் வாழும் அளவுக்கு எப்போதும் நீர் தேக்கி வைத்திருக்கும் முறை. இந்த முறை அக்காலத்தில் பரவலாகக் கடைபிடிக்கப்பட்டது. நற்றிணைப் பாடல் ஒன்று இம்முறையை சுவைபடச் சித்தரிக்கிறது. 'நெல் அறுவடைக்குச் சென்ற உழவர்கள், விதை எடுத்துச் சென்றனர். வயல்களில் இருந்த மீன்களைப் பிடித்துக் கொண்டு திரும்பினர்' என்கிறது அப்பாடல் (210)

இதன்படி அறுவடையின் போதே விதைக்கப் பட்டது அறுவடையின்போதும் வயலில் மீன் வாழுமளவு நீர் இருந்தது

விதைப்புக்காக நீரை வடித்தனர். அப்போது மீன்கள் சிக்கின, ஆகிய செய்திகளை உணர முடிகிறது.

இண்டாம் வகை வயல், பல்லுயிர் பெருக்கத்தின் சிறந்த சான்றாக உள்ளது. இந்த வயலில் மூன்று அடுக்குகள் உள்ளன. நீரின் அடியில் மீன்கள், நீர் மட்டத்தில் நீர்த் தாவரம், அதற்கும் மேலே நெற் கதிர்கள். நீர்த் தாவரங்கள் வளர்ந்து பூக்கும் காலம் வரை, இந்த வயலில் களைப் பறிப்பு உள்ளிட்ட மனிதச் செயல்பாடுகள் நடந்திருக்க வாய்ப்பில்லை. அவ்வாறு நடந்திருந்தால், நீர்த் தாவரங்கள் பூக்குமளவு வளர்ந்திருக்காது. ஆகவே, இது இயற்கைக்கு மிக நெருக்கமான விவசாயத் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் இருந்த வயல் ஆகும். அதாவது, இந்த வயலில் விதைப்புக்குப் பிறகு, நீர் மேலாண்மை மட்டுமே கவனிக்கப்பட்டுள்ளது. களை, எரு கொட்டுதல் உள்ளிட்ட வேலைகள் நடக்கவில்லை.

ஆசுதிரேலிய அறிஞர் பில் மோலிசன், தான் முன் வைக்கும் நீடித்த வேளாண்மை எனப்படும் நவீன முறையில் இம்மாதிரியான வயலை வலியுறுத்துகிறார். இம்முறை நமது முன்னோர்களால் வெற்றிகரமாகக் கடைபிடிக்கப்பட்டதாகும்.

மூன்றாம் வகை, முற்றிலும் மாறுபட்ட தொழில்நுட்ப வகையில் உள்ள வயல் ஆகும். இந்த வயலில், அறுவடையின்போது நெற் பயிரில் பறவைகள் கூடு கட்டியுள்ளன. ஆகவே, இது பிற நெல் வகைகளைக் காட்டிலும் நீண்ட காலப் பயிர் விளைந்த வயல் எனலாம். மேலும், இந்த வயலில் முந்தைய வயல்களைப் போல் நீர் தேக்கப்படவில்லை. அதேவேளை, குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர், இந்த வயலிலும் மனித நடவடிக்கைகள் இருக்கவில்லை. அவ்வாறு இருந்திருந்தால் பறவைகள் கூடு கட்டியிருக்காது. ஆகவே, இம்முறையும் இயற்கை வேளாண் தொழில் நுட்பங்களின் அடிப்படை யிலானதே.

இந்த மூன்று வயல்களும் உதாரணங்கள்தான். இவைபோல, ஏராளமான தொழில் நுட்பங்கள் நமது இலக்கியங்களில் உள்ளன. ஜப்பானிய அறிஞர் மாசனபு புக்கோகா முன் வைத்த, 'ஏதும் செய்யாத இயற்கை வேளாண்மைத் தொழில் நுட்பங்கள், தமிழகத்தில் ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்பே பரவலகாவும் வெற்றிகரமாகவும் நடைமுறையில் இருந்தன. இதற்கான சான்றுகளாக மேலேயுள்ள மூன்று நெல் பயிரிடும் முறைகளையும் கூறலாம். இவை தவிர, புக்கோகாவின் தொழில்நுட்பங்களில் சிறப்பு வாய்ந்ததான, 'அறுவடையின்போதே அடுத்த பயிரை விதைப்பது' என்ற முறையும் தமிழகத்தில் இருந்ததற்கான சான்றுகள் ஏராளமாக உள்ளன.

'விந்திய உழவர் நெல்லொடு பெயரும்' என்கிறது ஐங்குறுநூறு (மருதம் 3) அதாவது, விதைக்கச் சென்ற உழவர்கள் அறுவடை முடித்து நெல்லோடு திரும்பினர் என்கிறது இந்தப்பாடல். பொதுவாகவே, அறுவடைக்கும் பின் விதைப்பு என்ற இன்றைய முறை அக்கால மருதப் பாடல்களில் குறைவாகவே உள்ளது.

அறுவடையின்போதே விதைத்து விடும் வழக்கம் பரவலாக இருந்தது. உழாமலே விதைத்தனர் என்பதையும் இப்பாடல் மறைமுகமாக விளக்குகிறது.

அறுவடையோட விதைத்தல்

உழவு செய்யாத விதைப்பு

களை நீக்காமல், நீர் மேலாண்மையின் வழி களை கட்டுப்படுத்துதல்

பயிர்க் காலத்தில் வயலில் வெளி இடு பொருட்கள் சேர்க்காதிருத்தல் ஆகியவை புக்கோகாவின் கோட்பாடுகளில் அடிப்படையானவை.

இவை அனைத்துமே நம் முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்டன. உண்மையான இயற்கை வேளாண்மையின் முன்னோடிகளாக தமிழர்கள் இருந்தனர் என்பதற்கான சான்றுகளே முன்னர் கண்டவை.

மேலும், பல்லுயிர்ப் பெருக்கம் என்பது இன்று சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்ற அறிவியலாக உருவெடுத்துள்ளது. சங்கத் தமிழர் வேளாண் முறைகளில் மீன், நத்தை, நண்டுகள், செடிகள், கொடிகள், வண்டுகள், சிறு பூச்சிகள் உள்ளிட்ட பல்வேறு உயிர்களையும் அரவணைத்துச் செல்லும் விதமான தொழில் நுட்பங்கள் இருந்தன.

சங்கத் தமிழர் வேளாண் அறிவியல் குறித்த ஆய்வுகள் தமிழகத்தில் பெரிய அளவில் நடக்கவில்லை என்பது வருத்தத்திற்குரிய சேதி. சில ஆர்வலர்களும் வேளாண் அறிவாளர்களும் இந்தப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

இத்துறையில், வேளாண் அறிவாளர் பாமயன், சில முக்கிய கண்டுபிடிப்புகளைச் செய்துள்ளார். சங்க காலத்தில் உழாத வேளாண்மை இருந்தது என்பதற்கான நேரடியான சான்றை அவர் முன் வைக்கிறார்.

'தொய்யாது வித்திய துனர்படு துடவை' என்கிறது சிறுபாணாற்றுப் பாடல் உழவு செய்யாமல் விதைக்கப்பட்ட வளமான நிலம். என்பதுவே இதன் பொருள்.

'உழாது வித்திய படுஉக்குரற் சிறுதினை' என்கிறது புறநானூறு (168)

இயற்கை வேளாண்மைத் தொழில் நுட்பங்களை நம் மரபிலேயே வைத்துக் கொண்டு, அவற்றை அறியாதவர்களாக நிற்கிறோம். இது அவலமான நிலை ஆகும்.

இவை தவிர, அக்காலத் தமிழர்கள், கம்போஸ்டு எனப்படும் மட்கு எரு தயாரித்துள்ளனர் என்பதை பாமயன் மீட்டுருவாக்கம் செய்துள்ளார். 'தாது எரு மறகின் மூதூர்' என்பது அகநானூறு (165) தாது எரு என்பது மட்கு எரு ஆகும். இயற்கை வேளாண்மை. இடுபொருள் வேளாண்மை. நீடித்த வேளாண்மை, ஆகிய இன்றைய நவீன வேளாண் முறைகள் அனைத்துக்குமான தொழில்நுட்பங்கள் சங்கப் பாடல்களில் புதைந்து கிடக்கின்றன. அவற்றை முறைப்படி வெளிக்கொணர்ந்து, இன்றைய உழவர்களுக்குப் பயன்படச் செய்வது அரசின் கடமை ஆகும்.

ஆனால், தமிழக அரசு இதுபோன்ற உருப்படியான ஆய்வுகளுக்கு ஆதரவு அளிப்பதே இல்லை. தமிழக அரசைப் பொறுத்தவரை, மொழி வேறு, தொழில்நுட்பங்கள் வேறு என்ற அறிவுக்குப் புறம்பான நிலைப்பாடுதான் உள்ளது. மொழியில்தான் தொழில்நுட்பங்கள் உள்ளன. மொழியைக் காக்க வேண்டும் என்றால், அம்மொழியில் உள்ள பல்வேறு தொழில் நுட்பங்களைக் காக்க வேண்டும்.

தமிழ் செம்மொழி என்றால், அதன் இலக்கணச் சிறப்பால் மட்டும் அல்ல. தமிழில் உள்ள அறிவுச் செல்வம்தான் அதன் தனிச்சிறப்பு. தமிழக ஆட்சியாளர்கள் அனைவருமே, தமிழ் மொழியை வெறும் இலக்கிய, இலக்கண மொழியாகச் சித்தரித்தனர். அறிவு என்றாலே, மேற்குலகிலிருந்துதான் இறக்குமதியாகும் என்ற மூடநம்பிக்கையைப் பரப்பியுள்ளனர். ஆங்கிலம் என்றால் அறிவு. தமிழ் என்றால் பிற்போக்கு என்பதும் இவர்கள் கண்டுபிடிப்புகளில் ஒன்று. மேற்குலகம் நமது வேளாண்மைக்கு சாவு மணிதான் அடித்ததே தவிர, நன்மை செய்யவில்லை. இதனால், விவசாயம் என்பதே தமிழகத்தில் கேள்விக்குறியாகி வருகிறது.

தமிழகத்தின் உயிர்நாடியாகிய வேளாண்மக்களின் கழுத்தைப் பசுமைப் புரட்சியின் போரால் நெறித்துக்கொண்டு, மாநாடு நடத்துவது முரண் ஆகும். இதைக் கண்டு வருங்காலம் நகைக்கும். உண்மையிலேயே, செம்மொழியான தமிழ் மீது அக்கறை இருந்தால், முன்னோர்களின் தொழில் நுட்பங்கள் அனைத்தையும் மீட்டுருவாக்கம் செய்து, தற்காலப் பயன்பாட்டுக்குத் தக்கபடி மாற்ற வேண்டும். அப்படிச் செய்தால்தான், மொழி வாழும். வெறுமனே பழம்பெருமை பேசுவதாலோ மாநாடுகள் நடத்தித் திருவிழாக் கொண்டாடுவதாலோ தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் ஒரு பயனும் இல்லை.

**சி. நீனு**, சென்னை.

# நீளும் நீட் தேர்வு

மருத்துவ படிப்பில் சேருவதற்கான நீட் நுழைவு தேர்வை எழுதுவதற்கான வயது உச்சவரம்பை இந்திய மருத்துவ கவுன்சில் நிர்ணயம் செய்ததன் அடிப் படையில், சி.பி.எஸ்.இ. (மத்திய இடைநிலை கல்வி வாரியம்) சில மாதங்களுக்கு முன் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் நீட் தேர்வை எழுதுவதற்கு பொதுப்பிரிவு மாணவர்களுக்கான வயது உச்சவரம்பு 25 என்றும், இட ஒதுக்கீட்டு பிரிவினருக்கான வயது உச்சவரம்பு 30 என்றும் கூறப்பட்டு இருந்தது.


இந்த அறிவிப்பை எதிர்த்து கேரளாவைச் சேர்ந்த ஜலாலுதீன், சுரேஷ் என்ற இரு மாணவர்கள் தரப்பில் டெல்லி ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த டெல்லி ஐகோர்ட்டு, சி.பி.எஸ்.இ.யின் அறிவிப்பை உறுதி செய்து உத்தரவு பிறப்பித்தது.

இந்த நிலையில், இந்த வயது உச்சவரம்பை ரத்து செய்யக்கோரி அந்த மாணவர்கள் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். இது தொடர்பாக அவர்கள் தாக்கல் செய்த மனு, சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள் எஸ்.ஏ.பாட்டே, எல்.நாகேஸ்வரராவ் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. விசாரணை தொடங்கியதும் நீதிபதிகள், நீட் தேர்வை எழுதுவதற்கான வயது உச்சவரம்பை தளர்த்தி உத்தரவு பிறப்பித்தனர். நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறி இருப்பதாவது:

2019ஆம் ஆண்டில் மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வில் மனுதாரர்கள் உள்ளிட்ட 25 முதல் 30 வயது வரையிலான மாணவர்கள் விண்ணப்பிக்கவும், தேர்வை எழுதவும் அனுமதிக்கப்படுகிறார்கள். தேசிய தேர்வு முகமையின் இணையதளம், இதுபோன்ற மாணவர்கள் 2019 ஆம் ஆண்டு நீட் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் வகையில் மேலும் ஒரு வாரத்துக்கு திறந்து இருக்கும். அதாவது இந்த ஆண்டு நீட் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேதி மேலும் ஒரு வாரத்துக்கு நீட்டிக்கப்படுகிறது.(நீட் தேர்வுக்கு நவம்பர் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.)

இந்த வயது வரம்பை தளர்த்தி பிறப்பித்துள்ள உத்தரவு இடைக்கால உத்தரவுதான். பொதுப்பிரிவுக் கான வயது வரம்பை தளர்த்துவது என்பது இந்த வழக்கின் இறுதி தீர்ப்பை பொறுத்தது ஆகும். இவ்வாறு நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறி உள்ளனர். இட ஒதுக்கீடு பிரிவினர் 30 வயது வரை நீட் தேர்வு எழுத அனுமதிக்கப்படும் நிலையில், 25 வயதுக்கு மேற்பட்ட பொதுப்பிரிவு மாணவர்களுக்கு தற்போது இந்த இடைக்கால சலுகை அளிக்கப்பட்டு உள்ளது.


தமிழ்நாட்டில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் நீட் தேர்வுக்கு விண்ணப்பிப்பதில் சிரமம் ஏற்பட்டு உள்ளது என்றும், எனவே அவர்கள் விண்ணப்பிக்க கூடுதல் கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், நீட் தேர்வு பிரச்சினை தொடர்பான கேரள மாணவர்களின் வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, அந்த தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காக காலக்கெடுவை மேலும் ஒரு வாரத்துக்கு நீட்டித்து உத்தரவிட்டு இருக்கிறது.



# எனது பார்வையில் மா.செ.

சென்னை ஒய்.எம்.சி.ஏ., எசுபிளனேடு பட்டி மன்றத்தில் செவ்வாய்தோறும் நடைபெறும் செந்தமிழ் இலக்கியக் கூட்டங்களுக்குச் சென்று சான்றோர் பெருமக்கள் ஆற்றும் உரைகளைச் செவிமடுப்பது (கடந்த 2007ஆம் ஆண்டு முதல்) என்னுடைய வழக்கமாக இருந்து வருகிறது.

அவ்வாறு ஒரு செவ்வாயில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்திற்குக் கலைமாமணி அண்ணன் மா. செங்குட்டுவன், மேனாள் மேயர் சா. க. அவர்களோடு வந்திருந்தார்கள். முன்வரிசையில் அமர்ந்திருந்த அவர்களிடம் சென்று நான் வணக்கம் தெரிவித்தேன். மேயர் சா. கணேசன் அவர்களும் என் அத்தான் அமரர் எம். ஆர். கண்ணன் அவர்களும் தி.மு.க.வின் மேனாள் நகர மன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களும் ஆவர். ஆதலின் சா.க. அவர்களை மட்டுமே அறிந்தவன். அவர் மூலமாக நான் அண்ணன் கலைமாமணி மா. செங்குட்டுவன் அவர்களை அறிந்து கொள்ள முடிந்தது. இன்னாருடைய மருமகன் நான் என்று தெரிந்ததும் அண்ணன் மா.செ. அவர்கள் என்னிடம் பாசமுடன் பேசினார். அவர் கைவசம் வைத்திருந்த ‘மீண்டும் கவிக்கொண்டல்’ இதழையும்



பீம.பெருமாள்



என்னிடம் கொடுத்து "பழைய நூல்கள் சிலவற்றைத் தருகிறேன், என் இல்லத்துக்கு ஒரு முறை வாருங்கள்" என்று பரிவுடன் தெரிவித்தார்.

அந்த முதல் சந்திப்பிலேயே அண்ணன், அன்பால் என்னை ஈர்த்துவிட்டார் என்றே சொல்ல விரும்பு கிறேன். அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி நான் அவர் இல்லம் வருவதை ஒரு நாள் தெரிவித்து விட்டு அவரின் அனுமதியோடு சென்றேன். கழக வரலாறுகளைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடன் பேசியபோது, 'அண்ணா நாட்காட்டி' 1962 (பழசு) ஒன்றைக் காண்பித்து என்னைப் படித்துப் பார்க்கச் சொன்னார். நான் அதைப்படித்து முடித்தவுடன் அவரிடம் அதில் ஒரு நகல் எடுத்துக் கொள்ள விருப்பம் தெரிவித்தேன். முதலில் தயங்கிய அவர் பிறகு என்மீது நம்பிக்கை வைத்து, "நகல் எடுத்த வுடன் சீக்கிரம் நாட்காட்டியைத் தந்துவிடுங்கள், அதை நான் ஆவணமாகப் பாதுகாத்து வருகின்றேன்" என்று கூறினார். நானும் அவ்வாறே நாள்காட்டியின் நகல் எடுத்த இரண்டு படிகளில் ஒன்றை அவரிடமும் பழசுடன் சேர்த்து விரைவில் கொடுத்து விட்டேன். அவர் எழுதிய நூல்களில் சிலவற்றையும் எனக்கு அவருடைய கையெழுத்திட்டு அன்புடன் வழங்கினார்.

'மீண்டும் கவிக்கொண்டல்' இலக்கிய இதழின் வாசகனாக சந்தா செலுத்தி (2009) முதல், பிறகு புரவலனாகவும் பதிவு செய்து கொண்டேன். மாதம் ஒரு முறையேனும் என்னுடைய வருகையை முன்கூட்டித் தெரிவித்துவிட்டு அவர் இல்லத்திற்குச் சென்று வரவது என்னுடைய வழக்கமாகவே வைத்திருக்கின்றேன். என்னிடம் பாசத்துடனும் பரிவுடனும் பழகும் தன்மையர், அறிஞர் அண்ணா தம் கட்சியைக் குடும்பப் பாசம் ஊட்டி வளர்த்த வரலாறு தமிழகம் நன்கறியும். நம் நாடு இதழில் அண்ணா அவர்களோடு இணைந்து பணியாற்றிய தால் அந்த பாசமும் நட்பும் அவருக்கு வந்திரக் கக்கூடும்.

கலைமாமணி அண்ணன் மா.செ. அவர்கள் கழக வரலாற்றை ஆவணங்களாக்கி (அண்ணா நாள் காட்டி) சுயமரியாதை இயக்கம், களம் கண்ட காளையர்கள் பலரைப் பற்றியும் உள்ள நூல்களைப் பாதுகாத்து வருவதோடல்லாமல், இயக்கத்தை அறிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளவர்களுக்கு, அதைப் பற்றிய உணர்வை அவர்களுக்கு ஊட்ட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அதை ஒரு தொண்டாகவே கருதிச் செய்து வருகிறார் என்பது போற்றப்படக் கூடியது.

திராவிட மாணவர் பாசறையில் தந்தை பெரியாரால் அறிஞர் அண்ணாவால் நன்கு பயிற்சி பெற்ற காரணத்தால், அதனடிப்படையில் மா. செ. அவர்களும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங் களுக்கும் சென்று சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்பியவர்.

தமிழ், தமிழர் நலன், தமிழ்ப் பண்பாடு இவற்றைக் காக்க வேண்டும் என்னும் நெஞ்சுறுதியோடு, மீண்டும் கவிக்கொண்டல் இலக்கிய இதழினைப் பல்வேறு பிரச்சினைகளுக்கிடையிலும் நடத்தி வருகின்றார். இனமானப் பேராசிரியர் சுட்டிக் காட்டியதைப் போல, "வாழ்வில் பேரும் புகழும் வளவாழ்வும் தேட வேண்டிய நிலையில் இருந்த நாளிலும் வெளிச்சம் போடும் திசை நோக்கி அவர் ஓடவில்லை, தி.மு.க.வே அவரது வீடும், பள்ளியும் கோயிலுமாய் அமைந்தன. அவரது வாழ்வுபயிற்சிவழிபாடு அனைத்துக்கும் உரிய இடம் அது ஒன்றே எனலாம்" என்பது நூற்றுக்கு நூறும் உண்மையேயாகும்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியின் வைர வரிகளுக்கேற்ப, தனி ஒரு மனிதனாகப் பத்தாயிரம் தமிழ் நூல்களைச் சேகரித்து செருமன் வாழ் தமிழருக்கு அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் கப்பல் மூலம் அனுப்பி வைத்தது மகத்தானதொரு செயல் அல்லவா?

நான் அறிந்த வரையில், ஏற்றுக் கொண்ட கொள்கைகளுக்காகவே இலக்கிய இதழை நடத்துபவர் இவர் ஒருவராகத்தான் என் கண்களுக்குத் தெரிகின் றார்.

"கெஞ்சி வாழ்தல் நஞ்சினும் கொடிது,

கோடி கொடுப்பினும் கொள்கையிற் கோடேல்"

என்ற வாணிதாசனின் கவிதை வரிகளுக்கேற்ப இவரின் செயற்பாடுகள் உள்ளன.

எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி, தொய்வின்றித் தொடர்ந்து இந்த அகவையிலும் இலக்கியத் தொண்டு, செய்துவரும் அண்ணன் கலைமாமணி மா. செ. அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியும் வணக்கமும்.

# புலியுடை தரித்த தமிழ்

– கவிபாஸ்கர்

பிரபாகரன் இது
பிரபஞ்சம் உச்சரிக்கிற
உயிர்ச்சொல்
உலகின்
உயர்ச் சொல்லாகி
உலவுகிற – தமிழரின்
பெயர்ச்சொல்!

பிரபாகரன் இது வெறும்
வார்த்தையில்லை... உலகின்
மூத்த தமிழினத்தை
காக்க வந்த
மூத்த பிள்ளை!
வேலுப்பிள்ளை ஈன்றெடுத்த
ஈழப்பிள்ளை.

பிரபாகரன் – எம்
இலட்சியத்தின் முதலீடு
இலட்சினையின் குறியீடு
இலட்சோப இலட்ச
இளைஞர்கள் படிக்கும்
புரட்சியின் கையேடு

பிரபாகரன் – எம்
மண்ணின் முகம் – பாயும்
புலியின் நகம் – சீறும்
புயலின் நிறம்!

பிரபாகரன் – தமிழர்
இனத்தின்
கொள்கலன்!
கொள்கை முழக்க
போர்க்களம்

அவனே – நாங்கள்
நடக்கும் வழி!
அவனே – நாங்கள்
படிக்கும் மொழி
அவனே – எங்கள்
இலட்சிய ஒளி
அவன் தான் எங்களை
காக்கும் புலி!

அவன் வரியுடை தரித்த
தமிழ்!
பார் புலிப்படை தமிழர்
புகழ்!

பிரபாகரன்
புறநானூற்று
இலக்கியத்தின்
புதிய மகன் – காரிருளை
நீக்க வந்த
கலிங்கத்துப்பரணி!

பிரபாகரன்
எழுச்சியின் பாதை
புரட்சியின் பூபாளம்!
இனத்தின் அரண்!
தமிழர் தேசத்தின் திறன்

ஆண்ட இனத்தின்
அடையாளமாய்
அறப்போரின்
படைக்கலமாய்
பிறந்து வந்த – எம்மானே
உம்மை
புகழ்ந்து பாட
மீண்டும் மீண்டும்
பிறப்பேன் நான்!

எரிமலை நெருப்பை சுமந்தவன்
எரிகிற நெருப்பாய்ப் பிறந்தவன்
தமிழர் இனத்தின் தலைமகன் – புதிய
திசையைக் காட்டிய பெருந்தலைவன்

மின்னல் இடியாய் மின்னியவன் – பெரும்
இன்னலை வெடியாய் விரட்டியவன்
முப்படை முதலில் கட்டியவன் – யார்
எப்படை வரினும் முட்டியவன்

புல்லையும் போர்வாளாய் மாற்றியவன்
தமிழ் பிள்ளைக்கு உணர்வை ஊட்டியவன்
வில்லையும் சொல்லையும் ஏந்தியவன்
போர் எல்லையில் வென்றிட முந்தியவன்

துவக்கின் விழிகளில் சீறியவன் – ஒரு
இலக்கின் வழிகளில் பேசியவன்
கிழக்கின் சிவப்பாய் மாறியவன் – ஒளி
விளக்கில் விடியலை மாற்றியவன்

தமிழர் மனதினில் ஏறியவன் – இன
உணர்வை நரம்பினில் ஏற்றியவன்
ஈழ யாழினை மீட்டியவன் – எம்
இளையோர் கூட்டத்தை மீட்கிறவன்

செயலின் வடிவில் ஊறியவன்
புயலின் உருவாய் மாறியவன்
உலகத் தமிழரை சேர்க்கிறவன் – ஒரு
புள்ளியில் புலிகளை இணைக்கிறவன்

விடுதலைக் கனவைத் தீட்டியவன் – இன
கொடுமையைத் தடுக்கிற வீரனவன்
தானே சுழலும் பூமியவன் – எம்
தமிழ்க் குலம் காக்கிற சாமியவன்

அன்றும் இன்றும் என்றும் இவனே
எங்கள் மானத் தலைவன்!
இருந்தான் இருக்கிறான் இருப்பான் இவனே
எங்கள் வீரத்தமிழன்!







## நினைவேந்தல்!

தியாகி. எஸ்.எஸ்.விசுவநாத தாஸ் (31-12-1940)

சாதாரண குடும்பத்தில் பிறந்தவரே
பள்ளிப்படிப்பைஇழந்தவரே
நாடகத் துறையில் தன்னை
ஈடுபடுத்திக் கொண்டவரே
பாட்டுப்பாடி நடித்து பெயர் பெற்றவரே
காந்தியையும் வியந்து நேசிக்க வைத்தவரே
ஜமீன்தாரைப் போல் இருந்தவரே
தேசத் தந்தை கேட்டுக் கொண்டதால்
கதர் ஆடைக்கு மாறியவரே
நாடகங்கள்மூலம் நாட்டின்
விடுதலைக்காக போராடியவரே
மக்களிடத்தில் சுதந்திர தாக்கத்தை விதைத்தவரே
தேசத்தையும் நாடகத்தையும்
ஒன்றாகஇணைத்தவரே
நாடக மேடையில் வெள்ளை கொக்கு பறக்குதுபார்
என்று வெள்ளையனைஎதிர்த்தவரே
இருபத்தொன்பது முறை சிறை சென்றவரே
தேசப்பாடல் பாடியே உயிர் நீத்தவரே
எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருப்பவரே
உங்கள்கதை கேட்டாலும் படித்தாலும்
இளைஞர்கள் துணிச்சல் மிக்கவர்களாக
மாற்றும் அய்யா உங்கள் தேசப்பற்று
எங்களுக்கு வேணுமய்யா
உங்கள் வாழ்வு எங்கள்மனம் முழுதும்
நிறைந்து நிற்குமய்யா எந்நாளும்.

**வாணியம்பாடி. தியாகராஜன்.**

## அரசியல்வாதி

உனக்கு உழைக்க
எனக்கு உத்தரவிடு
கெஞ்சும் எஜமான்

மக்களே மகேசனென
தீபாராதனை காட்டும்
பூசாரி

நிறைய பொய்
குறைய உண்மை கூறும்
நவீன அரிச்சந்திரன்

நிழலுக்கு வண்ணம் தீட்ட
தூரிகை தேடும்
ஓவியன்

தென்றலுக்கு திசைகாட்ட
அகல் விளக்கேற்றும்
விட்டில்பூச்சி

பூக்கடை துர்நாற்றம்
புலால்கடை நறுமணம்
சான்றளிக்கும் தாசில்தார்.

-இளந்தேவன்-

# மேற்கு தொடர்ச்சி மலையைக் காப்போம்

இயற்கை எழில் கொஞ்சும் கேரளா மாநிலம் சமீபத்தில் வரலாறு காணாத மழை வெள்ளத்தில் மூழ்கி எழுந்த கதை உலகறிந்தது.

14 மாவட்டங்களிலும் 2 வாரங்களுக்கும் மேலாக கொட்டித்தீர்த்த கனமழையும், வெள்ளப்பெருக்கும் கேரளவாசிகளை நிலைகுலைய வைத்தது.

கடவுளின் சொந்த தேசம் இப்படி சாத்தானின் பிடியில் சிக்கிக்கொண்டதற்கு பருவநிலை மாற்றம் ஒரு காரணம் என்றாலும், அங்கு அழிவின் வீரியம் அதிகரித்ததற்கு மனிதத் தவறும் மற்றொரு காரணம்.

பெரும்பாலான இயற்கை பேரிடர்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் மனிதனும் காரணமாக இருப்பான் என்ற விதி, கேரள சோகத்திலும் தொடரத்தான் செய்திருக்கிறது. வினையை விலை கொடுத்து வாங்கியிருக்கின்றன கேரள, கர்நாடக அரசுகள்.

அப்படி அங்கு தற்போதைய பேரழிவை அதிகப்படுத்தியது, மேற்குத்தொடர்ச்சி மலையில் மனிதர்களும், அரசுகளும் மேற்கொண்ட ஆக்கிரமிப்பும், மர அழிப்பும்தான்.

கேரளாவின் பல இடங்களிலும், கர்நாடகாவின் குடகு மாவட்டத்திலும் மலைப்பாங்கான பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவுகளுக்கு, இந்த மலைச்சுரண்டலே காரணம்.

நாட்டின் மேற்கு பகுதியில் இயற்கை அரணாக வீற்றிருக்கும் இந்த மேற்கு தொடர்ச்சி மலையின் சிறப்புகளை சொல்லி மாளாது.

தென்மேற்கு பருவகாற்றை தடுத்து, மழைக்கு உத்தரவாதம் அளிக்கும் இந்த மலைத்தொடர், தமிழகத்தின் குமரி மாவட்டம் முதல் குஜராத் வரை நீண்டு கிடக்கிறது.

**தென்மேற்கு பருவகாற்றை தடுத்து, மழைக்கு உத்தரவாதம் அளிக்கும் இந்த மலைத்தொடரை பாதுகாப்பது நமது கடமை!**





இமயமலை தொடருக்கு அடுத்ததாக, 1 லட்சத்து 60 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவில் அற்புதமான உயிரியல் புதையலாக விளங்கும் இந்த மலைத்தொடர், உலகின் புகழ்பெற்ற பல்லுயிர் பிரதேசங்களில் ஒன்று. இங்கு 7,400 வகை பூக்கும் தாவரங்கள், 139 பாலூட்டி இனங்கள், 508 பறவை இனங்கள், 6ஆயிரம் பூச்சியினங்கள், 179 நீர் வாழ் இனங்கள் இருப்பதை வைத்தே இதை உறுதி செய்ய முடியும்.

தேசியப் பூங்கா, வனவிலங்கு சரணாலயம், காப்புக் காடுகள் என யுனெஸ்கோவின் 39 பாரம்பரிய பகுதிகளுடன், ஏராளமான வற்றாத ஜீவநதிகளுக்கு ஆதாரமாக விளங்குகிறது. கோதாவரி, காவேரி, கிருஷ்ணா, தாமிரபரணி, துங்கபத்ரா என இங்கு உற்பத்தியாகும் 63 நதிகளால் இந்திய தீபகற்பத்தின் பெரும்பகுதி வளம் கொழிக்கிறது.

சமீப காலமாக உலகெங்கிலும் பெருகி வரும் மக்கள் தொகைக்கு இயற்கை வளங்கள் இரையாகி வருவதை போல, இந்தியாவின் மக்கள் தொகை பெருக்கத்துக்கு இந்த வனப்பு மிகுந்த மேற்கு தொடர்ச்சி மலையும் தப்பவில்லை.

சாலைகள், ரெயில் தண்டவாளங்கள், நீர் தேக்கங்கள், மின் திட்டங்கள் போன்றவற்றால் இந்த மலைத்தொடர் தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வருகிறது.

மேய்ச்சல் தொழில், மரக்கடத்தல், காட்டுத்தீ, மூலிகை கொள்ளை, ஆக்கிரமிப்பு என பல்வேறு கூறுகளால் இங்குள்ள காடுகள் உருக்குலைந்து வருகின்றன.

அதுவும் கர்நாடகாவின் வடக்கு கானரா, ஹவேரி, குடகு, சிமோகா போன்ற மாவட்டங்களில் இந்த மலைப்பகுதி வேகமாக அழிந்து வருகிறது.

இந்த மாநிலத்தில் மேற்கு மலைத்தொடரில் உள்ள தனியார் நிலங்களில் மரங்களை வெட்டுவதற்கான அனுமதியை ஒழுங்குபடுத்துவதற்காக 'கர்நாடக (பாதுகாப்பு) மரங்கள் சட்டம்' இயற்றப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த சட்டத்தின் கீழ் குடகு மாவட்டத்தில் நிலத்தின் உரிமை தொடர்பாக பல்வேறு குழப்பங்கள் உள்ளன. இதை சரியாக பயன்படுத்திக் கொண்ட மர மாபியாக்கள் மரங்களை கொள்ளையிட்டு வருகின்றனர்.

கடந்த 1967 முதல் 2007 வரையிலான காலகட்டத்தில் இந்த மாவட்டம் மட்டும் 30 சதவீத மரங்களை இழந்திருப்பதாக அறிக்கை ஒன்று கூறுகிறது.

சாய்வான மலைப்பிரதேசங்களில் இருந்த இந்த மரங்கள் திருடப் பட்டதால் சமீபத்திய மழையில் அந்த பகுதிகளில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டு சேதங்களை விளைவித்து இருந்தது.

மலைப்பகுதியில் அதிக அளவில் மேற்கொள்ளப் படும் வளர்ச்சி திட்டங்கள் நிலைமையை மேலும் மோசமாக்கி வருகின்றன.

கர்நாடகாவின் ஹசன் மாவட்டத்துக்கு உட்பட்ட சக்லேஷ்பூர் தாலுகாவில் மொத்த காட்டையும் சிறு சிறு நீர்மின் திட்ட பிரதேசங்களாக மாற்றி வைத்துள்ளனர். சாலை விரிவாக்கமும், வடக்கு கானரா,குடகு காட்டுப்பகுதி வழியான ரெயில் பாதைகளும் காட்டுப்பகுதிகளை கூறுபோட்டு இருக்கின்றன.

இதே நிலைமைதான் தமிழகம், கேரளா, கோவா, மராட்டியம், குஜராத் போன்ற மாநிலங்களிலும் மேற்கு மலைத் தொடருக்கு ஏற்பட்டு இருக்கிறது.

இயற்கையை மாற்றியமைத்தல், மரங்களை கொள்ளையிடுதல், சிறுசிறு குன்றுகளை அழித்தல், சுற்றுலா விடுதிகளை உருவாக்கி நீரின் போக்கை தடுத்து நிறுத்துதல் போன்றவைதான் சமீபத்திய வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுக்கு ஆணிவேராக இருந்திருக்கின்றன.

இந்த மலைத்தொடரை பாதுகாப்பது தொடர்பாக அமைக்கப்பட்ட, சுற்றுச்சூழல் வல்லுனர் மாதவ் காட்கில் தலைமையிலான குழுவும், இஸ்ரோ விஞ்ஞானி கஸ்தூரிரங்கன் தலைமையிலான குழுவும் மலையை பாதுகாப்பதில் தனித்தனி அணுகுமுறை கொண்ட பரிந்துரைகளை வழங்கின. ஆனாலும் தனித்துவமிக்க இந்த மலைத்தொடரை பாதுகாக்க வேண்டும் என்பதுதான் இரு குழுவினரின் அறை கூவலும்.

இந்த மலைக்கான புவியியல் எல்லையை வரையறுப்பதில் இரு குழுக்களும் வெவ்வேறு முறையை பின்பற்றி முடிவுகளை வெளியிட்டன.

அதன்படி மலையின் பரப்பளவை 1,29,037 சதுர கி.மீ. ஆக வரையறுத்த காட்கில் குழு இதில் சுமார் 75 சதவீத பரப்பளவை நிச்சயம் பாதுகாக்க வேண்டும் என குறிப்பிட்டு இருந்தது.

அதேநேரம் கஸ்தூரிரங்கன் குழுவோ, மலைத்தொடரின் மொத்த பரப்பளவை 1,64,280 சதுர கி.மீ. என வரையறுத்து, இதில் 37 சதவீதம் அதாவது 59,940 சதுர கி.மீ.பகுதி, சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால் இந்த பகுதிகளை எந்த விலை கொடுத்தேனும் காத்திட வேண்டும் என அறிவுறுத்தி இருந்தது.

கஸ்தூரிரங்கன் குழு அறிக்கையின் அடிப்படையில் மேற்கு தொடர்ச்சி மலையில் 56,825 சதுர கி.மீ. பகுதி சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை என கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் தேதி வரைவு அறிக்கை வெளியிட்ட மத்திய அரசு, அந்த பகுதிகளை மீளாய்வு செய்யுமாறு அறிவுறுத்தியது.

ஆனால் கேரளா மட்டும்தான் இந்த ஆய்வை மேற்கொண்டது. மத்திய அரசு வரைவு அறிக்கை வெளியிடுமுன்னே இந்த ஆய்வை மேற்கொண்ட கேரளா, தங்கள் மாநிலத்தில் சூழியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி 13,108 சதுர கி.மீயில் இருந்து 9993.7 சதுர கி.மீ.ஆக குறைந்திருப்பதாக அறிவித்தது.

தங்கள் மாநிலத்தில் ஏற்கனவே 22000 சதுர கி.மீ. பரப்பளவை ஒழுங்கமைவு செய்துவிட்டதாக கூறிய சித்தராமையா தலைமையிலான அப்போதைய கர்நாடக அரசு, சூழியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்ற பெயரில் மீண்டும் ஒரு மீளாய்வு தேவையில்லை என வாதிட்டது. மத்திய அரசின் அறிக்கைகளை அது நிராகரித்தது.

மாநிலத்தில் ஏறக்குறைய 1576 கிராமங்களுடன் 20,668 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட சூழியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியை மீளாய்வு செய்ய வல்லுனர் குழு ஒன்றை அமைக்குமாறு கடந்த ஏப்ரல் மாதம் மீண்டும் கர்நாடக அரசை மத்திய அரசு வலியுறுத்தியது. ஆனால் இதையும் மாநில அரசு காதில் வாங்கவில்லை.

தமிழக அரசோ, 52 கிராமங்களில் விரிந்து கிடக்கும் 6665.47 சதுர கி.மீ. பகுதியை மாநில வனத்துறை அடையாளம் கண்டிருப்பதாகவும், இந்த பகுதிகளை சூழியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிக்குள் இணைத்து விடலாம் எனவும் தெரிவித்தது.

அதுமட்டுமின்றி சில புதிய பகுதிகளையும் சூழியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிக்குள் இணைக்க பரிந்துரைத்தது. அதேநேரம் இந்த வரைவு அறிக்கையை இறுதி செய்வதற்கு பல்வேறு விதிமுறைகளையும் மத்திய அரசுக்கு தமிழகம் விதித்து இருக்கிறது.

கேரளாவும் கூட தங்கள் மாநிலத்தில் சூழியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக வரையறுக்கப்பட்ட 9,993.70 சதுர கி.மீயில் இருந்து 9,107 சதுர கிமீ.ஆக குறைத்தது.

இதைப்போல மராட்டியம், குஜராத், கோவா போன்ற மாநிலங்களும் நகர்புறமாக்கலை சுட்டிக் காட்டி மத்திய அரசின் அறிக்கையை புறந்தள்ளி விட்டன.

இப்படி மேற்கு மலைத்தொடரை கொண்டிருக்கும் 6 மாநிலங்களும் வல்லுனர் குழுக்களின் அறிக்கைகளை ஏற்று சூழியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை மீளாய்வு செய்யவில்லை. இயற்கை வளங்களை பேணுவதில் தனிமனிதனைப்போல அரசுகளும் அக்கறை காட்டவில்லை.

இந்த சூழியல்தான் கேரள, கர்நாடகாவில் சமீபத்தில் பெய்த மழையும், வெள்ளப்பெருக்கும் பேரழிவை உருவாக்கி இருக்கின்றன. காடுகள் மற்றும் மலைகளை ஆக்கிரமித்தே இத்தகைய சேதத்துக்கு காரணம் என காட்கில் போன்ற சூழியல் வல்லுனர்கள் உடனடியாக எச்சரிக்கை விடுத்து இருந்தனர். ஆனால் அதை யாரும் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை.

மிகப்பெரும் மனிதவளம் கொண்டிருக்கும் இந்தியா ஐவகை நிலமும் பெற்று இருக்கிறது. இந்த மனிதவளம் செழிக்க வேண்டுமானால் அந்த ஐவகை நிலங்கள் மற்றும் அதன் வளங்களின் இருப்பை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக மழையை உறுதி செய்யும் மலைவளம் பாதுகாக்கப்பட வேண்டும்.

அவற்றில் மின்சாரம், சாலை, ரெயில் திட்டங்கள் நிறுவுவதை கைவிட்டு, அணை, குவாரி, சுரங்கங்கள் அமைப்பதை தடுத்து நிறுத்த வேண்டும். அங்கு சட்ட விரோதமாகவும், சட்டத்துக்கு உட்பட்டும் மரங்களை வெட்டுவதை நிறுத்த வேண்டும்.

முக்கியமாக சூழியல் முக்கியத்முவம் வாய்ந்த பகுதிகளை பராமரிப்பது தொடர்பாக காட்கில், கஸ்தூரிரங்கன் குழுக்கள் வழங்கிய பரிந்துரைகளை அரசுகள் முழுமையாக கடைபிடிக்க வேண்டும். அரசு அறிவித்தபடி சூழியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை மீளாய்வு செய்வது மிகவும் அவசியம்.

இயற்கையின் பொக்கிஷமான இந்தக் காடுகள் மற்றும் மலையை பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமை என்பதை மனிதர்களும் உணர வேண்டும். அதை விடுத்து தான்தோன்றித்தனமாக அந்த அரண்களை அழித்து ஒழித்தால் ஒட்டுமொத்த மனித குலமும் அழிவின் பிடியில் சிக்குவது உறுதி.


# மேற்கு தொடர்ச்சி மலையை அழிக்கும் திட்டங்கள்

| திட்டம் | அங்கீகாரம் பெற்றவை | | கிடப்பில் இருப்பவை | |
|---|---|---|---|---|
| | அனுமதி பெற்றவை | பரப்பளவு (ஹெக்டேரில்) | அனுமதி பெற்றவை | பரப்பளவு (ஹெக்டேரில்) |
| நீர்ப்பாசனம் | 61 | 2,065.45 | 44 | 990.67 |
| மின்திட்டம் | 72 | 7,425.28 | 48 | 2,233.29 |
| சுரங்கம் மற்றும் குவாரி | 137 | 9,218.35 | 66 | 11,978.50 |
| சாலை | 59 | 320.09 | 92 | 787.04 |
| ரெயில்வே | 10 | 398.77 | 8 | 657.43 |
| மின்பாதை | 258 | 8640.32 | 72 | 211.16 |
| மற்றவை | 110 | 1,363.68 | 256 | 3,769.35 |
| மொத்தம் | 707 | 29,431.94 | 586 | 20,627.44 |

**பாதுகாக்கப்பட்ட பகுதிகள்**

மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையின் படி மேற்கு மலைத் தொடரில் ஒவ்வொரு மாநிலமும் கொண்டிருக்கும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளின் விவரம் (சதுர கி.மீயில்) வருமாறு:

தமிழ்நாடு : 6,914
கேரளா : 9,993
கர்நாடகா : 20,668
கோவா : 1,461
மாராட்டியம் : 17,340
குஜராத் : 448



# சர்க்கரைகுணமாக

ஒரு பெண் (65) கடந்த 20 ஆண்டுகளாக நீரிழிவு நோய்காரணமாக ஒருநாளைக்கு இரண்டு முறை இன்சுலின் எடுத்துக்கொண்டார்.

அவர் ஒரு பதினைந்து நாட்களுக்கு வீட்டில் செய்த (கீழே கொடுக்கப்பட்டுள்ள மருந்தை பயன்படுத்தினார்).

அதனால் இப்போது அவருக்கு நீரிழிவு நோய் முற்றிலும் குணமாகிவிட்டது. இனிப்பு உட்பட அவருக்குப் பிடித்தமற்ற உணவுகளை சாதாரணமாகவும் மற்றும் சுதந்திரமாகவும் சாப்பிடும் நிலைமைக்கு அவர் மாறிவிட்டார்.

டாக்டர்கள் அவருக்கு இன்சுலின் மற்றும் வேறுஎந்தஇரத்தசம்பந்தமான சர்க்கரை மருந்துகளை இனிமேல் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளனர்.

டி.ஆர்.டோனிஆல்பீடா (பாம்பேசிறுநீரக நிபுணர்) விடாமுயற்சியுடனும் மற்றும் பொறுமையுடனும் விரிவான சோதனைகள் செய்தார், நீரிழிவுக்கான ஒரு வெற்றிகரமான சிகிச்சையைக் கண்டுபிடித்தார்.

1. கோதுமை 100 கிராம்
2. பார்லி 100 கிராம்
3. கருப்பு விதைகள் (கொலுஞ்சி) 100 கிராம்

தமிழ்மொழியில் கொலஞ்சி என்றால் கருஞ்ஜீரகம்.

**தயாரிக்கும் முறை :**

5 கப்தண்ணீரில் மேலேகூறியஅனைத்துப் பொருட்களையும் போட்டுக் கொள்ளுங்கள். அதை 10 நிமிடம் கொதிக்க வைத்துவிட்டு அடுப்பை அணைத்துவிடவும். அது குளிர்ந்த பின்வடிகட்டி விட்டு அந்தநீரை ஒரு கண்ணாடி குடம் அல்லது பாட்டிலில் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும்.

உங்கள்வயிறுகாலியாக இருக்கும் பொழுது, ஒவ்வொருநாளும் அதிகாலையில் இந்ததண்ணீரை ஒரு சிறியகிண்ணத்தில் எடுத்து உட்கொள்ள வேண்டும். இதை 7 நாட்களுக்கு தொடர்ந்து உட்கொள்ளவும்.

அடுத்தவாரம் அதையே மீண்டும் ஆனால் ஒரு நாள்விட்டு ஒரு நாள் தொடர்ந்து உட்கொள்ளவும்.

இந்த சிகிச்சையால் 2 வாரங்களில் நீங்கள் சாதாரணமாகிவிடுவீர்கள். நீங்களே ஆச்சரியப்படும் அளவிற்கு மாற்றத்தை உணர்வீர்கள். எல்லோரையும் போல எந்தப்பிரச்சனையும் இல்லாமல் சாதாரணமாக எல்லா உணவுகளையும் உட்கொள்ளலாம்.

நேர்மையற்ற சமுதாயத்தில் ஒவ்வொரு
பிரச்சினையையும் எதிர்கொள்வதிலேயே
வாழ்க்கையின் பெரும்பகுதி விரயமாகிவிடுகிறது.
எஸ். நீலகண்டன்.

சங்ககாலத்தில் ஏழை, எளியவர்களின் பசியைப் போக்கிய 'பண்ணன்' என்னும் வள்ளலை 'பசிப்பிணி மருத்துவன்' என்றே புறநானூறு போற்றுகின்றது.

அன்பர் பணி செய்ய
என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலைதானே
வந்தெய்தும் பராபரமே!
தாயுமானவர்.

கெஞ்சிவாழ்தல் நஞ்சினுங்கொடிது
கோடி கொடுப்பினும் கொள்கையிற் கோடேல்
– கவிஞர் வாணிதாசன்.

என் சிந்தனைகள் வாய்மை நெறிபட்டவை!
அடிப்படைத் தெளிவானவை, உரந்தருபவை!
–வசுப. மாணிக்கனார் – தமிழறிஞர்.

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தேய்தும் – ஒன்றை
நினையாதமுன் வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்!
– ஔவை மூதாட்டி.

தொகுப்பு : பீமபெருமாள்.


**விளம்பர கட்டண விபரம்**

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுபக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுபக்கம்)**
**பின்னட்டை ரூ.** 10,000/- **(முழுபக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ.** 5,000/- **(முழுபக்கம்)**



# இயற்கையை காப்போம்!

அன்பென்ற சோலையில்
ஆலயமென்ற வனத்தினில்
இலையென்ற உரத்தினை மறந்து
ஈகையென்ற படிப்பினை மறந்து
உறவென்ற இயற்கையை மறந்து
ஊறு விளைவிக்கும்
 பிளாஸ்டிக்கை
எடுத்தாளும் நிலையை
என்னவென்று சொல்வது
ஏதுமறியாது நடத்தும் வாழ்க்கையினில்
ஒற்றுமையோடு பிளாஸ்டிக் ஒழிக்கும்
களத்தினில்
ஓரமாய் நின்று வேடிக்கை பார்க்காமல்
ஔவையார் போன்று
களையெடுக்க களம்
 இறங்கிடுவோம்.

P. சாந்தி.



# இப்படியே இன்னும் எத்தனை நாள்கள்?

சாதிக்குக் கல்விகளில் சலுகை என்றால்
சாதிக்கப்பலவழிக ளமைத்துக் கொள்வார்
நீதிக்குள் சாதி மதம் புகுத்தும் போது
நியாயமான தீர்ப்புகளோ இயலா தாகும்
தேதிகளும் கேட்டியிங்கே தீர்ப்பாய்க் கூறும்
செய்திகளாய்ப் படிக்கின்ற நிலையி லாகும்
வாதாடும் வாதங்கள் புரியும் வண்ணம்
வாய்ப்புகளை வழங்கவேண்டும் நீதிமன்றம்.

வழக்காட வசதியின்றி வாழும் ஏழை
வாதிட்டா நீதிபெற முடியு மிங்கே?
வழக்கறிஞர் வாதத்தால் திறமை காட்டி
வாதாடிப் பெறுகின்ற வெற்றி எல்லாம்
உழக்கரிசி கூடயில்லா நிலையில் நம்மில்
உள்ளவர்கள் பலபேர்க்கும் கிடைத்து விட்டால்
இழப்பின்றிப் பெற்றிடுவார் நீதி யிங்கே
எல்லாரும் சமமாவோம் சாதி யின்றி

இப்படியே எல்லாரும் சாதிக் காக
இருந்திட்டால் சாதிகள்தான் நம்மை ஆளும்
அப்படியும் இப்படியும் செப்படி வித்தை
செய்பவர்தான் உயர்கின்றார் சலுகை பெற்று
எப்போதும் இல்லாதார் சாதிக் குள்ளே
எத்தனைபேர் இருக்கின்றார் அவரும் வாழ்வில்
இப்படியே இன்னும்தான் எத்தனை நாள்கள்?
இருந்திடுவார் இந்நாட்டில் விடிவே இல்லாது?

கவிஞர். இராமன், சென்னை 600 024.



# மோடி முதலாளிகளின் முகமூடி

இந்திய நாட்டின் பிரதமர் நவம்பர் மாதம் இரண்டாம் தேதி ஒரு திட்டத்தை அறிவித்தார். சிறு குறு நிறுவனங்கள் 59 நிமிடங்களில், அதாவது ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே ஒருகோடி வரை கடன் வாங்கிக் கொள்ளலாம் என்பதுதான் அந்தத் திட்டம். இந்த அறிவிப்பு வந்ததும் ஆளுங்கட்சியின் ஆதரவாளர்கள் ஆகா, ஓகோ என்றார்கள். தொழில் செய்கிறவர்கள் மகிழ்ச்சியின் கடை எல்லைக்கே சென்று விட்டார்கள்.

பொருளாதார நிபுணர்களும் ஊடகங்களும் இது எப்படி சாத்தியமாகும் என்று புரியாமல் குழம்பிப் போனார்கள். சாதாரணமாக ஒரு லட்சம் ரூபாய் தொழில் கடன் வாங்குவதற்குள்ளாகவே சிறு, குறு தொழில் செய்பவர்கள் படாதபாடு படுகிறார்கள். ஜி.எஸ்.டி. எண், டின் எண், வருமானவரி தாக்கல் செய்யப்பட்ட ஆதாரம், ஐ. எஸ். ஓ. சான்றிதழ், தொழிற்சாலை லைசென்ஸ், மாசுக் கட்டுப்பாடு வாரியச் சான்று, இவைகளோடு ஏதேதோ கேட்பார்கள். எல்லாவற்றையும் கொடுத்தாலும் அவர்கள் விரும்பும் தொகையை கையூட்டாக கொடுக்கும் நேரம் வரை ஆயிரத்தெட்டு காரணங் களைச் சொல்லி அலைக்கழிப்பார்கள். இப்படிப் பட்ட இந்தியாவில் இது எப்படி நடக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்த வர்களில் ஒரு சிலர் கடன் வாங்கும் செயல் பாட்டில் இறங்கி யிருக்கின்றனர்.

GUITOITU, psbloansin59minutes.com என்ற வலைதளம் சென்றிருக்கிறார்கள். இனி அவர்கள் சொல்லும் செய்தியைக் கேட்போம்:

கேப்பிட்டா வேர்ல்டு என்ற தனியார் நிறுவனம் இதை நிருவகித்து வருகிறது. இதற்குள் நுழைந்தால் ஒரு ஆன்லைன் விண்ணப்பம் இருக்கிறது. எல்லா ஆதாரங்களும் இருக்கிறதா என்ற கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அத்தனைக்கும் திருப்தியான பதில் சொல்வதோடு விண்ணப்பக் கட்டணம் ரூபாய் 1180/ கட்ட வேண்டும். கடன் உங்களுக்கு வழங்கப்பட்டால், கடன் தொகையில் 0.35 சதவீதம் கேப்பிட்டா வேர்ல்டு நிறுவனத்துக்கு பிராசசிங் கட்டண மாகத் தர வேண்டும் என்ற நிபந்தனை யும் உண்டு.

இத்தனைக்கும் நீங்கள் ஒப்புக்கொண்டால் நிஜமாகவே உங்களுக்கு கடன் வழங்கலாம் என்று சான்றிதழ் ஒன்று வருகிறது. யெஸ், ஒரு மணி நேரத்தில் அல்ல, சிலருக்கு முக்கால் மணி நேரத்திலேயே வந்து விடுகிறது. பொறுங்கள், இது கடன் வழங்குவதற்கான உத்தரவுக் கடிதம் (Loan Sanction Letter) எல்லாம் இல்லை. இதன் பெயர், In Principle Approval Letter அதாவது ஒரு வகையான பரிந்துரைக் கடிதம். ஓர் இளம் சிறுதொழில் நிறுவன அதிபர் இப்படி விண்ணப்பித் துப் பெற்ற பரிந்துரைக் கடிதத்துடன் தேசிய வங்கி ஒன்றை அணுகினார். அவருக்கு ரூபாய் 85 லட்சம் கடன் வழங்கலாம் என்று அந்தக் கடிதத்தில் இருந்தது.



அவரை இன்முகத்துடன் வரவேற்ற வங்கி மேலாளர், ஒரு கொலாட்ரல் செக்யூரிட்டி கொண்டு வாங்க, கொடுத்து டலாம்!" என்றார். அதாவது, அந்த ரூபாய் 85 லட்சத்துக்கு

**சைதை மணிமாறன்**

## ஒரு பிரதமர் மக்களிடம் வெளிப்படையாக அறிவித்த திட்டத்தில் ஏன் இவ்வளவு சிக்கல்? நிஜத்தில் இந்தத் திட்டம்தான் என்ன? நிஜமாகவே சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு இதனால் பலன் உண்டா? உண்மையிலேயே பலனடையப் போகிறவர்கள் யார்?

சொத்துப் பத்திரம், அசையும் சொத்து, அசையாத சொத்து என ஏதாவது ஒன்று அடமானம் வேண்டுமாம். இதற்கு எதற்கு இந்தத் திட்டம். இதைத் தான் போன ஆண்டே எங்கிட்ட சொல்லீட் டீங்களே என நொந்தபடி வங்கியிலிருந்து வெளியே றினார் அவர்.

ஒரு பிரதமர் மக்களிடம் வெளிப்படையாக அறிவித்த திட்டத்தில் ஏன் இவ்வளவு சிக்கல்? நிஜத்தில் இந்தத் திட்டம்தான் என்ன? நிஜமாகவே சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு இதனால் பலன் உண்டா? உண்மையிலேயே பலனடையப் போகிற வர்கள் யார்?

விசாரித்தால் பல திடுக்கிடும் உண்மைகள் வெளியே வருகின்றன. பிரதமர் அறிவித்த இந்தத் திட்டத்தை அமுல்படுத்தும் கேப்பிட்டா வேர்ல்டு பிரைவேட் லிமிடெட் என்ற இந்த நிறுவனம் கடந்த 2015ஆம் ஆண்டில்தான் தொடங்கப்பட்டிருக்கிறது. ஜினந்த்ஷா மற்றும் விநோத் மோத்தா என்ற இருவர் இதனைத் துவங்கியிருக்கிறார்கள். ஜினந்த்ஷா ஒரு ஆடிட்டர். 34 வயதான இளைஞர். நிதி மற்றும் உற்பத்தி சார்ந்த நிறுவனங்களில் சில காலம் பணியாற்றியிருக்கிறார். பாஜக வுக்கும் மோடிக்கும் நெருக்கமானவர்.

இன்னொருவரான வினோத் மோத்தா 64 வயது அனுபவஸ்தர். என்.பி.எஃப்.சி. எனப்படு:ம வங்கி சாரா நிதி நிறுவனங்களில் பணியாற்றியவர். இவரும் அதிகார மையங்களுக்கு நெருக்கமானவர்தான். இவர்கள் இருவரும் சேர்ந்துதான் இந்த நிறுவனத்தைத் தொடங்குகிறார்கள்.

இந்த நிறுவனம் கம்பெனிகள் சட்டப்படி தாக்கல் செய்து அதன் முதலாம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி இதன் வருமானம் ஜீரோ. ஆமாம்! ஒரு ரூபாய் கூட சம்பாதிக்காத லெட்டர் பேட் கம்பெனி அது! அடுத்தடுத்த ஆண்டுகளில் சில லட்சம் ரூபாய்களை மட்டும் வருமானமாகக் காட்டியிருக்கி றார்கள். கவனிக்க, வருமானம்தான். இலாபம் இல்லை.

வருமானமே லட்சங்கள்தான் என்றால் லாபம்? அது நஹி... நட்டக்கணக்கு காட்டியிருக்கிறார்கள். இந்த இரு நிறுவனர்கள், இயக்குநர்களுக்குப் பிறகு அவிரூக் சக்ரவர்த்தி என்ற 34 வயது இளைஞர் இணைகிறார். இவரும் பெரும் புள்ளிகளுக்கு நெருக்கமானவர்தான்.

கடந்த ஜூலையில் இந்த நிறுவனத்தில் ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) இதன் 54% பங்குகளை ரூ.22.5 கோடிகளுக்கு வாங்குகிறது. இதைத் தவிர மற்ற அரசு வங்கிகளும் இதன் பங்குகளை வாங்குகின்றன. இப்போது இந்நிறுவனத்தில் ஏழு இயக்குநர்களில் நான்கு பேர் அரசுத்துறை நிறுவனங்களின் பொறுப்பாளர்கள்.

நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனத்தை அதன் அசலான பங்கு மதிப்பில் இருந்து பல மடங்கு ரூபாய் உயர்த்தி இந்திய அரசின் நிறுவனங்கள் ஏன் வாங்கின? யாருக்கும் புரியவில்லை. இந்நிலையில்தான் இந்தியப் பிரதமர் இந்த 59 நிமிடத்தில் ஒரு கோடி கடன் திட்டத்தை அறிவித்திருக்கிறார்.

ஒரு விண்ணப்பத்துக்கு ரூபாய் 1,180 என்றால் ஒரு கோடிப்பேர் விண்ணப்பித்தால் வருமானம் எவ்வளவு? ஆயிரம் கோடி இல்லையா? இது அத்தனையும் கேப்பிட்டா வேர்ல்டு நிறுவனத்துக்குப் போகிறது. ஆக, சிறு தொழில் நிறுவனங்களுக்குக் கடன் கிடைக்கிறதோ இல்லையோ, கேப்பிட்டா வேர்ல்டு நிறுவனத்தக்குக் கட்டணம் கிடைத்துவிடுகிறது. மறுபுறம், விண்ணப்பதாரருக்குக் கடன் கிடைத்தால் 0.32 விழுக்காடு பிரசாசிங் கட்டணம் வேறு கிடைக்கும்!

நிஜத்தில் இத்தத் தொகை எங்கு போகிறது, ஆளுங்கட்சிக்கா அல்லது மத்திய அமைச்சர்களுக்கா? என்று கேள்வி எழுப்புகிறார்கள் பொருளாதார, சமூக அறிஞர்கள். நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் பல்வேறு வகையான மூலதனத் திரட்டல்களை அரசியல் கட்சிகள் செய்யும். அதில் ஒன்றுதான் இந்த 59 நிமிடக் கடன் திட்டம். மற்றபடி சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு உண்மையான பலன் ஏதும் இல்லை என்கிறார்கள் விசயம் தெரிந்தவர்கள்.

# பத்திரிகை மீது காழ்ப்புணர்ச்சி கூடாது உயர்நீதிமன்ற உத்தரவு!

பொது வாழ்க்கைக்கு வந்த பின்னர் தவறுகளைச் சுட்டிக்காட்டும் பத்திரிகை மீது காழ்ப்புணர்ச்சி கூடாது. உயர்நீதிமன்ற உத்தரவு!

தமிழக அமைச்சரவையில் இருந்து செங்கோட்டையன் கடந்த 2012ஆம் ஆண்டு நீக்கப்பட்டார். இதுகுறித்து இந்தியா டுடே பத்திரிகை 2012ஆம் ஆண்டு ஆகஸ்டு எட்டாம் நாள் செய்தி வெளியிட்டது.

அதில், சசிகலாவின் தூண்டுதலின் பேரில் செங்கோட்டையனை அமைச்சர் பதவியில் இருந்து ஜெயலலிதா நீக்கியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் செய்தி சமுதாயத்தில் உள்ள தன் நற்பெயருக்கு களங்கம் எற்பட்டுவிட்டதாகக் கூறி அந்தப் பத்திரிகை ஆசிரியர் உள்ளிட்டோர் மீது ஜெயலலிதா அவதூறு வழக்கை சென்னை மாவட்ட முதன்மை செசன்சு கோர்ட்டில் தொடர்ந்தார்.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி அந்த பத்திரிகை சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை நீதிபதி பி.என்.பிரகாஷ் விசாரித்தார். பின்னர் நீதிபதி பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

பத்திரிகையில் வெளியான செய்தியினால் தன்னுடைய நற்பெயருக்கு எந்த வகையில் களங்கம் ஏற்பட்டத என்பது தெளிவாக இல்லை. எனவே, பத்திரிகை மீத ஜெயலலிதா தொடர்ந்த அவதூறு வழக்கை ரத்து செய்கிறேன்.

இந்திய ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான பத்திரிகையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால், நாட்டின் ஜனநாயகம் மோசமான நிலைக்கு தள்ளப்படும். பத்திரிகையின் குரல் நெறிக்கப்பட்டால், இந்தியா சர்வாதிகார நாடாக மாறிவிடும். நாட்டின் விடுதலைக்காக போராடியவர்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் ஆகியோரது உழைப்பு வீணாகிவிடும்.

சில நேரங்களில் பத்திரிகைகளில் தவறுகள் நேரலாம். அதேநேரம் ஜனநாயகத்தில் பத்திரிகையின் பங்கை மறுக்க முடியாது.

ஒருவர் பொதுவாழ்க்கைக்கு வந்தபிறகு தவறுகளை பத்திரிகைகள் சுட்டிக் காட்டும்போது அதன் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளக்கூடாது. இது போன்ற விசயங்களுக்காக அவதூறு வழக்குகள் தொடரப்படுவதை தடுக்காவிட்டால், இந்த நீதிமன்றம் அரசியலமைப்பின் நோக்கத்தை நிறைவேற்ற தவறிவிட்டதாகிவிடும்.

பத்திரிகைகளுக்கு சமூகத்தில் நடைபெறும் அரசியல் நிகழ்வுகள், பொதுமக்களுக்கான பயன்பாடுகள் ஆகியவற்றை வெளிக்கொண்ட வரவேண்டிய கடமைகள் உள்ளது. இந்த மனு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு நீதிபதி கூறியுள்ளார்.



# ராஜீவ்காந்தியை விடுதலைப்புலிகள் கொல்லவில்லை

## விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சட்டத்துறை

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சட்டத்துறைப் பிரதிநிதி லதன் சுந்தரலிங்கம், அரசியல் துறை பிரதிநிதி குருபரன் குருசாமி என்ற பெயரில் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்று வெளிவந்தது. அதில் கூறப்பட்டுள்ளதாவது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழ மக்களுக் காக தமிழீழ மக்களால், தமிழீழ மக்களின் பாதுகாப்புக்காக தோன்றிய இயக்கம். நாங்கள் போராட்டக்குழுவோ, ஆயுதக்குழுவோ, வன்முறை இயக்கமோ அல்ல. மாறாக, தமிழீழத்தில் நடந்த அரசு வன்முறைகளையும் அரசு ஆதரவு ஆயுதக் குழுக்கள் வன்முறைகளையும் கட்டுப்படுத்தும் இயக்கமாகவே இருந்துள்ளோம். எங்கள் ஆயுத மவுனிப் பிற்குப் பிறகும் இதுவரை கட்டுப்பாடுகளை காத்து வந்துள் ளோம். எனினும், எங்கள் மக்களுக்கு இதுவரை எந்த விடிவோ, தீர்வோ கிடைக்கவில்லை. இன்றளவும் எம் மக்கள் திட்டமிட்ட இனவழிப்பிற்கே உட்படுத்தப்படு கிறார்கள்.

எங்கள் ஆயுத மவுனிப்பின் பத்து ஆண்டுகளுக்குப் பிறகும் கூட புலிகளையும் தமிழீழ மக்களையும் ராசீவ்காந்தி கொலையுடன் தொடர்புபடுத்துவதை காணும்பொழுது, இந்தக் கொலை தமிழீழ மக்களை அழிக்கச் செய்யப்பட்ட சதித் திட்டமாகத்தான் தோன்றுகிறது. தொடர்ந்து அழிந்து கொண்டிருக்கும் எம் மக்கள் மீது இதுபோன்ற அபாண்டமான குற்றச்சாட்டுகளை இனியும் பதிய வேண்டாம் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். ராசீவ்காந்தி படு கொலைக்கும் எமக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை என முன்பே பலமுறை விடுதலைப்புலிகள் இயக்கம் கூறியிருக்கிறது. கொழும்பில் பி.பி.சி. நிறுவனம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனை பேட்டி கண்டபோது, “ராசீவ் காந்தி படுகொலையில் எமது இயக்கத்துக்கு எந்தத் தொடர்பும் இல்லை” எனத் தெளிவாகக் கூறினார்.

இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி மறைவுக்குப் பின்பும் அவரது புதல்வரான ராசீவ்காந்தி தமிழீழ விடுதலைப் புலிகளோடு ரகசிய உறவைப் பேணி வந்துள்ளார் என்பதை யும் இவ்வேளையில் நினைவூட்ட விரும்புகிறோம். இந்திய அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே உள்ள உறவைத் தகர்த்தெறியும் உள்நோக்கோடு இலங்கை அரசும் அந்நிய சக்திகளும் இணைந்து மேற்கொண்ட சூழ்ச்சியின் விளைவே முன்னாள் பிரதமர் ராசீவ் காந்தியின் படுகொலை என உறுதியாகக் கருதுகிறோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்படும் அபாண்ட மான ராசீவ்காந்தி படுகொலைப் பழி உடனடியாகத் துடைத் தெறியப்பட வேண்டும் என்றும் விடுதலைப்புலிகள் மீதான களங்கம் நீங்குமானால் உலக நாடுகள் புலிகள் மீது விதித் துள்ள தடைகள் நீங்கும் என்றும் எமது மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் காலம் கனியும் என்று நம்புகிறோம்.



# கஜா புயல்
# 200 தென்னைகள் தப்பிய அதிசயம்
## துல்லியமான கணிப்பு, துணிச்சலான முடிவு

பல்லாயிரக்கணக்கான தென்னை மரங்களைப் பறிகொடுத்த திருவாரூர் மாவட்ட கிராமம் ஒன்றில், வானிலை ஆய்வாளர் செல்வகுமாரின் துல்லியமான கணிப்பும், ஒரு விவசாயியின் துணிச்சலான முடிவும் சேர்ந்து, ஒரே ஒரு தோப்பில் உள்ள 200 தென்னை மரங்களைக் காப்பாற்றியிருக்கிறது.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அருகே உள்ளது இடும்பாவனம் கிராமம். கஜா புயலின் கோர தாண்டவத்தால் அதிக அளவில் தென்னை மரங்களை பறிகொடுத்த கிராமங்களில் இதுவும் ஒன்று. இந்த கிராமத்தில் மட்டும் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் சாய்ந்துவிட்டதாகக் கூறப்படு கிறது. ஆனால், இதே கிராமத்தில், சீனு என்ற விவசாயி மட்டும் குறைந்த சேதங்களோடு தப்பியுள்ளார். இதற்கு காரணமாக இருந்தது, ஆசிரியர் செல்வகுமார் கூறிய வானிலை முன்னறிவிப்பு.

தன்னார்வ அடிப்படையில் வானிலை நிகழ்வு களைக் கணித்து கூறி வருபவர் ஆசிரியர் செல்வ குமார். கஜா புயல் வேதாரண்யம் அருகேதான் கரையைக் கடக்கும் என்று துல்லியமாகக் கணித்து கூறியிருந்தார். முன்பு தனுஷ்கோடியை அழித்த புயல் போலவே, கஜா புயலால் டெல்டா மாவட்டங்களுக்கு பேரழிவு ஏற்படக் கூடும் என்றும் எச்சரித்து வந்தார். அதைக் கேட்டதால்தான் தனது தென்னை மரங்களை கணிச மாக காப்பாற்ற முடிந்தது என் கிறார் இடும்பாவனம் விவசாயி சீனு. இதுபற்றி அவர் கூறியதாவது:

நான் ஒரு சாதாரண விவசாயி. 250 தென்னை மரங்களோட ஒரு தோப்பு இருக்கு. தோப்பிலேயே கூரை வீட்டில் குடியிருக்கோம். 10 மாடுகளும் வளர்க்கிறேன்.

கடந்த சில வருஷமாகவே பள்ளிக்கூட வாத்தியார் செல்வகுமார் சொல்ற வானிலை செய்தி களை கேட்டு, அதுக்கேத்தபடிதான் சாகுபடி செய்றேன். வேதாரண் யத்தில புயல் அடிக்கப் போவுதுன்னு ரொம்ப நாள் முன்னாடியே சொன்னாரு. தனுஷ் கோடிய அழிச்சது போல பயங்கரமா தாக்கப் போவுதுன்னும் ஒரு வாரம் முன்னாடியே சொன்னாரு.

சேதத்தை எப்படி குறைக்க லாம்னு நிறைய ஆலோசனைகளும் சொன்னாரு. தென்னை மரத்தோட



தலைக்கனத்தைக் குறைச்சிட்டா மரங்களை ஓரளவு காப்பாத்த முடியும்னாரு.

**பதினஞ்சாயிரம் ரூபா செலவாச்சு**

அதனால, புயலுக்கு ரெண்டு நாள் முன்னாடி ஆள் வச்சு, ஒவ்வொரு மரத்திலயும் தலா 10 பச்சை மட்டைய வெட்டினேன். தேங்காய், இளநீர், குரும்பை எல்லாத்தையும் இறக்கிட்டேன். குரும்பை மட்டுமே 12 ஆயிரத் துக்கு மேல இருக்கும். இதெல் லாம் நல்லா தேறி, தேங்காயா பறிச்சா ஒன்னேகால் லட்சம் ரூபா வரை விலை கிடைக்கும். இப்போ அவ்வளவும் நஷ்டம் தான். இதுகள வெட்டி இறக்கவே பதினஞ்சாயிரம் ரூபா செலவாச்சு.

வாத்தியார் சொன்னதுபோல, எங்க கூரை வீட்டுலயும், மாட்டு கொட்டகை மேலேயும் பச்சை தென்னை மட்டைய அடுக்கி, கயித்தாலே நல்லா வரிஞ்சு கட்டினேன். வீட்டுக்கு பக்கத்துல நின்ன ஒரு புளிய மரத்தை மட்டும் வெட்ட முடியல. அதனால, அந்த மரம் விழுந்து வீட்டோட அடுப்படி பக்கம் மட்டும் கொஞ்சம் சேதமாயிட்டு. மத்தபடி வீட்டுக்கோ, மாட்டு கொட்டகைக்கோ எந்த பாதிப்பும் இல்ல. தென்னையில 30 மரம் மட்டும் விழுந்துட்டு. இருநூத்தி சொச்சம் மரங்களைக் காப்பாத்திட்டேன்.

வாத்தியாரோட நீண்டகால முன்னறிவிப்பை கேட்டு, நெல் வயல்ல முன்னாடியே நடவை முடிச்சுட்டேன். அதனாலே இப்போ பயிர் நல்லா வளர்ந்து, பாதிப்பு இல்லாம தப்பிச்சது.

இவ்வாறு அவர் கூறினார்.

'புயல் வர்றதுக்கு முன்னாடியே பச்சை மட்டைகளை வெட்டினீங்களே, ஊர்ல யாரும் எதுவும் சொல்லலியா?" என்று கேட்டதற்கு, "ஊர் மக்களை விடுங்க. எங்க வீட்டுல என்ன பேச்சு பேசினாங்க தெரியுமா' என்று, மகளைப் பார்த்தார்.

எம்எஸ்சி படித்துள்ள அவரது மகள் சுபஸ்ரீ கூறும் போது, "பச்சை மட்டைகளை அப்பா வெட்டுறதை பார்த்து பதறிட்டோம். 'நல்லா வளர்ந்துட்டு இருக்கிற மரத்தில் இப்படி வெட்டாதீங்க'ன்னு கெஞ்சி னோம். நாங்க சொன்னதால, சில மரங்களை மட்டும் விட்டுட்டாரு. அந்த மரங்கள்தான் இப்போ விழுந்து கிடக்குது. அப்பாவை அவர் போக்கிலேயே விட்டிருந்தா, இந்த மரங்களையும் காப்பாத்தி இருக்கலாம்னு இப்ப தோணுது" என்றார்.

தொடர்ந்து பேசிய விவசாயி சீனு, 'ஒருவேளை புயல் வீசாமல் போயிருந்தால், பச்சை மட்டை களை வெட்டித் தள்ளிய நான் கிராமத்தில் பெரும் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாகியிருப்பேன். அதை நான் பெரிய விஷயமா நினைக்கல. அந்த கிண்டல், கேலியைக்கூட நான் ஏத்துக்கு வேன். ஆனால், அந்த நஷ்டம் என்னோட போயிருக்கும். இப்ப புயல் அடிச்சு ஊரே அழிஞ்சு கிடக்கிற சூழ்நிலையில, என் மரத்தைக் காப்பாத்திட்டேன் என்று என்னால் சந்தோஷப்பட முடிய வில்லை...' என்று வேதனையோடு கூறினார் சீனு.

துல்லியமான கணிப்பும், ஒரு விவசாயியின் துணிச்சலான முடிவும் சேரும்போது, ஆக்ரோஷமாக தாக்கும் பேரிடரையே எதிர் கொண்டு ஓரளவு பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள முடியும் என்பதற்கு இந்த சம்பவம் ஓர் உதாரணம். எதிர்காலத்தில் இதுபோன்ற பேரிடர்களை எதிர்கொள்ள பலருக்கு இது வழிகாட்டியாக இருக்கும் என்பது மட்டும் நிச்சயம்!

பேராசிரியர்.ஜா.ஆரென் கிளென்,
அமெட் பல்கலைக்கழகம்,
சென்னை, தமிழ் நாடு



**தமிழக முதல்–அமைச்சரின் மருத்துவ காப்பீடு ரூ.5 லட்சமாக உயர்வு**

தமிழ்நாட்டில் ஏழை, எளிய மக்களுக்கும் உயர்தர மருத்துவ சிகிச்சை கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், மறைந்த முதல்–அமைச்சர் ஜெயலலிதா 11.01.2012 அன்று முதல்–அமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தை தொடங்கிவைத்தார். இந்த திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல்–அமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தில் 1.58 கோடி குடும்பங்களுக்கு காப்பீடு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த திட்டத்தில் இதுவரை 26.96 லட்சம் நபர்கள் ரூ.5 ஆயிரத்து 133.33 கோடி அளவுக்கு பயன் அடைந்துள்ளனர்.

முதல்–அமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள், பல்வேறு மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக தற்பொழுது வழங்கப்பட்டு வரும் ரூ.2 லட்சம் வரை யிலான காப்பீட்டு தொகையினை, மேலும் உயர்த்தி வழங்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். இந்தக் கோரிக்கையினை பரிசீலனை செய்து, ரூ.2 லட்சம் வரையிலான காப்பீட்டு தொகையினை ரூ.5 லட்சம் ஆக உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளார் முதலமைச் சர் அதன்படி 1.12.2018 முதல் முதல்–அமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1.58 கோடி குடும்பங்களுக்கு, அங்கீ கரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் ஆண்டு ஒன்றுக்கு ரூ.5 லட்சம் வரையிலான காப்பீட்டு தொகைக்கு கட்டண மில்லாமல் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

# இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி முடங்கி விட்டது

## ரகுராம்ராஜன்



அமெரிக்காவில் பெர்க்லி நகரில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 'இந்தியாவின் எதிர்காலம்' என்ற தலைப்பில், ரிசர்வ் வங்கி முன்னாள் கவர்னர் ரகுராம்ராஜன் பேசினார். அவர் பேசியதாவது, கடந்த 2012ஆம் ஆண்டில் இருந்து 2016ஆம் ஆண்டுவரை, இந்தியாவில் வேகமாக வளர்ந்து வந்தது. ஆனால், பணமதிப்பு நீக்கம், ஜி.எஸ்.டி. ஆகியவை கடந்த ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை முடக்கி விட்டன.

கடந்த ஆண்டு சர்வதேச பொருளாதாரம் வளர்ந்து வந்த நிலையில், இந்தியப் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருப்பது வியப்பாக உள்ளது. இந்தியா தற்போது ஏழு விழுக்காடு பொருளாதார வளர்ச்சியை கண்டு வருகிறது. ஆனால், வேலை வாய்ப்பு சந்தையில் புதிதாகச் சேரும் மக்களுக்கு இது போதாது. அவர்களுக்காக மாதத்துக்கு பத்து லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். எனவே, நமக்கு பொருளாதார வளர்ச்சி அதிகம் தேவை. இந்த வளர்ச்சியுடன் திருப்தி அடையக்கூடாது.

இந்தியாவின் வளர்ச்சி மீண்டும் சுதாரித்து எழும்போது, கச்சா எண்ணெய் விலை உயர்வு பாதிப்பை உருவாக்கி உள்ளது. பணமதிப்பு நீக்கம், ஜி.எஸ்.டி. ஆகியவற்றில் இருந்து இந்தியா மீண்டு எழுந்தாலும் கூட கச்சா எண்ணெய் விலை, இந்திய பொருளாதாரத்துக்கு சற்று கடினமானதாகவே இருக்கும்.

வாராக்கடன் பிரச்சினையும் இந்தியாவை பாதித்துள்ளது. அதற்கு திவால் சட்டம் தீர்வு அல்ல. பன்முனை அணுகுமுறை தேவை. இந்தியாவில் அதிகாரம் முழுவதும் மத்திய அரசிடம் குவிந்திருப்பதும், பிரச்சினையின் ஒரு அங்கம் ஆகும். மத்தியில் இருந்தே இந்தியா செயல்பட முடியாது. பலரும் சுமையை ஏற்றுக் கொள்ளும்போதுதான், இந்தியா இயங்கும் என்று ரகுராம்ராஜன் பேசினார்.

வள்ளலார் மக்களின் போக்கைக் கண்டு வாடினார்!
சமுதாயத்தின் குறைகளைக்கண்டு சாடினார்!
அவற்றைப் போக்க இறைவன் திருவருளைத் தேடினார்!
அதற்காக 5818 பாடல்களைப் பாடினார்!

தமது நெறிமுறைகளை மக்கள் ஏற்காததுகண்டு
சித்திவளாகத் தனிஅறைக்குள் சென்று கதவை மூடினார்!
இறைவனோடு இறைவனாக இரண்டறக் கலந்து கூடினார்!

உணர்ச்சியும் கிளர்ச்சியும் ஒட்டிப்பிறந்தவை!
எழுச்சியும் புரட்சியும் இரட்டைக் குழந்தைகள்!
கவிதை அதற்குக் கருவே!
புவியோர் அறிந்த போற்றுதல் நலமே!

விருதென்பதுவே பாராட்டு!
வெற்றிக்கதுதான் சீராட்டு!
அரிதென்றுலகில் எதுவுமில்லை!
அயராமுயல்வே அதனெல்லை!

எந்தக்காயத்தையும் ஆத்திடுது காலம்
ஆனால் இழப்பு...? என்பரோ
மீட்க முடியாத மிச்சம்தான்!

வாழுங்காலத்தில் மீட்க முடியாத வடுக்கள்
இழப்புக்கள் மட்டுமே!

–பீமபெருமாள்.

---

## 'பேராசிரியர் ரத்னா விருது 2018' பேராசிரியர் ஆரன்கிளன் பெற்றார்




தமிழ்ச் சமூகத்தின் இரத்தினங்களை கௌரவிக்கும் ரத்னா விருதுகளில் மிகச் சிறந்த கல்வித் தொண்டினைப் பாராட்டி பேராசிரியர்களுக்கு வழங்கப்படும் 'பேராசிரியர் ரத்னா விருது 2018' விருது பேராசிரியர் ஆரன்கிளன் அவர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்டது.



# எம்.பி.சீனிவாசனின் வழித்தோன்றல் இசையமைப்பாளர் தினா!

நவம்பர் இருபத்தைந்தாம் நாள், திரைப்பட இசைக்கலைஞர்கள் சங்கத்தின் திருப்புமுனைக்கு வித்திட்ட நாள் என்று இசைக்கலைஞர்களில் பலர் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

திரைக்கலை உலகில் முதன்முதலாக தோன்றிய சங்கம் என்றால், அது திரைப்பட இசைக்கலைஞர்கள் சங்கம்தான். அதன் பின்னர்தான் மற்ற சங்கங்கள் எல்லாம் தோன்றின என்று கூறப்படுகிறது. பொதுவுடைமைவாதியான மரியாதைக்குரிய எம்.பி.சீனிவாசன் அவர்களும் அவருடன் நண்பர்கள் சிலரும் சேர்ந்து இந்தச் சங்கத்தை பதிவு செய்தனர். ஐ.பி.ஆர்.எஸ். என்று சொல்லக்கூடிய திரைத்துறை படைப்பாளிகளுக்கு பயனளிக்கக்கூடிய அமைப்பையும் திரு. எம்.பி.எஸ்.அவர்கள்தான் தொடங்கினார். தொடங்கியதோடு மட்டுமல்லாது எல்லோருக்கும் பயன்தரக்கூடிய வகையில் வளர்த்தெடுத்து பலருக்கு வாழ்வளித்திருக்கிறார் எம்.பி.எஸ். அவர்கள்.

ஐ.பி.ஆர்.எஸ். பற்றி எனக்கு விளக்கி என்னை அந்த அமைப்பில் இணைத்தவர் எம்.பி.எஸ். அவர்கள்தான் அவருக்கு இன்றும் நன்றி சொல்கிறேன் என்கிறார், திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா என்ற புகழ்பெற்ற பாடலை இயற்றிய கவிஞர். பூவை செங்குட்டுவன் அவர்கள். இந்த அளவிற்கு திரைத்துறையில் நற்பணி ஆற்றிய எம்.பி.எஸ். அவர்களைப் போல இன்று தினா உருவெடுத்திருக்கிறார்.

பல ஆண்டுகளாக உறுப்பினர்களாக இருந்தும் இதுவரை வாக்குரிமைகூட இல்லாது இருந்த இசைக்கலைஞர்கள் அனைவருக்கும் வாக்குரிமை கொடுக்கப்படுகிறது என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து மக்களாட்சி தத்துவத்தை உயிர்பெறச் செய்திருக்கிறார். ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேலுள்ளவர்கள் இசைக்கலைஞர்கள் சங்கத்தின் முழு உறுப்பினராக முடியாது என்ற வேண்டாத விதியை தூக்கிய எறிந்திருக்கிறார்கள் தற்போதைய தலைவர் தினா, செயலாளர் சாரங்கன், பொருளார் குருநாத், துணைச்செயலாளர் ஜோனா பக்த குமார் உள்ளிட்ட நிருவாகிகள்.

இவை மட்டுமின்றி பல்வேறு புதிய திட்டங்களை விதிகளாகக் கொண்டு வந்து இசைக்கலைஞர்கள் மனதில் பால்வார்த்திருக்கிறது தற்போதைய நிருவாகம். ஒரு சிலருக்குத்தான் இந்த இசைக் கலைஞர்கள் சங்கம் என்ற நிலையை எல்லோருக் குமானது என்ற நிலைக்கு திருப்பி இருப்பது இந்த நிருவாகம் செய்த முதல் நன்மை என்று சொல்லலாம்.

திரைப்பட இசைக்கலைஞர்கள் சங்கத்தில் இதுவரை பல முரண்பாடுகள் இருந்து வந்தன. உதாரணத்திற்கு, பார்ப்பனர்கள் ஒரு குழு,

*தெலுங்கர்கள் ஒரு குழு, மலையாளிகள் ஒரு குழு, கிறித்தவர்கள் ஒரு குழு என்று இருந்தன. தமிழர் களுக்கு என்று எந்தக்குழுவும் இல்லை. தமிழர்கள் வந்தவர்களை வாழ்வித்துப் பழக்கப்பட்டவர்கள் என்பதால் தங்களுக்கு குழு வைத்துக் கொள்ளவில்லை போலும். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று சொல்லிச் சொல்லியே ஏமாந்த கூட்டம். தற்போதைய நிருவாகத்தில் இம்மாதியான குழு மாறுபாடுகள் மறைந்து பெரும்பாலானவர்கள் ஒன்று பட்டு நிற்கின்றனர்.*

*திரைத்துறையில் முதலில் தோன்றிய சங்கத்தின் கட்டடம் தோன்றிய அன்று இருந்தது போலவே இன்றும் இருக்கிறது. எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை. திரைத்துறையில் இருக்கிற மற்ற சங்கங்கள் அனைத்தும் புதிய கட்டிடங்களில் நடந்து கொண்டி ருக்கின்றன. புதிய புதிய உயர்களைக் கண்டிருக்கின்றன. ஆனால் எந்த வித உயர்வும் இல்லாமல் இதுவரை இருந்துவந்த இசைக்கலைஞர்கள் சங்கம் இனி நல்ல நிலைக்கு வந்துவிடும் என்று பலர் நம்பிக்கை கொள்ள தொடங்கியிருக்கிறார்கள். அனைவருக்கும் வாக்குரிமை கொடுத்திருப்பதின் மூலம் திரைப்பட இசைக் கலைஞர்கள் சங்கத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு, கலைஞர்களுக்கு பயன் கிடைக்க வாழ்த்துவோம்!*

*இமயவரம்பன். பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்.,*
*உதவி ஆசிரியர், முற்றம்.*



யோகி ஆதித்யநாத் அதிரடி?

உத்தரப்பிரதேசத்தில் உள்ள அலகாபாத்தில் அடுத்த ஆண்டு கும்பமேளா நடைபெற உள்ளது. இதில், நாடு முழுவதும் இருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் வருவார்கள் என்பதால் ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை திருமண விழாக் களுக்கு பி.ஜே.பி. ஆதித்யநாத் அரசு தடை டவிதித்துள்ளது? காரணம், வரும் பக்தர்களுக்கு திருமண மண்டபங்கள் போன்ற இடங்கள் தங்குவதற்கு வேண்டுமாம்.

இந்த அறிவிப்பால் விருந்தினர் இல்லங்கள், மண்டபங்கள், விழாக்கள் நடைபெறும் புல்வெளிகள், சமையல்காரர்கள் போன்று பலவற்றிற்கு முன்பணம் கொடுத்தவர்கள் பாதிக்கப்பட்டு நிற்கிறார்கள். இதில் பலர், திருமண நாட்களை தள்ளி வைத்துவிட்டார்கள், சிலர் அலகாபாத்தைத் தவிர்த்து வேறு இடங்களுக்கு திருமண நிகழ்வை மாற்றிக் கொண்டுள்ளனராம்.

## வெள்ளரிக்காய் சாப்பிடுவதால் என்னென்ன நன்மைகள் உண்டு தெரியுமா...!



வெள்ளரிக்காயில் நீர் அதிகமாகவும், கலோரி குறை வாகவும் இருப்பதால், உடல் எடையைக் குறைக்க விரும்புப வர்களுக்கு இது சரியானஉணவாகஅமையும். தினமும் வெள்ளரிக்காயை உட்கொண்டால் தீவிரமான மலச்சிக்கலை நீக்கும்.

வெள்ளரிக்காயில் இன்சுலின் சுரப்பதற்கு, கணையத்தில் உள்ள அணுக்களுக்கு தேவையான ஹார்மோன் ஒன்று வெள்ளரிக்காய்ச் சாற்றில் உள்ளது.

அதனால் இது சர்க்கரை நோயாளிகளுக்கு பெரிதும் உதவுகிறது.

வெள்ளரிக்காயில் உள்ள ஸ்டேரோல் என்ற பொருள் உடலில் உள்ள கெட்ட கொழுப்புகளை குறையச் செய்யும். மேலும், அதிலுள்ள நார்ச்சத்து, பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் இரத்தக்கொதிப்பை கட்டுப்பாட்டில் வைக்க உதவும்.

வெள்ளரிக்காய்ச் சாறுஈறுகளில் இருக்கும் நோய்களை குணப்படுத்தும். மேலும் வாயில் துர்நாற்றத்தை ஏற்படுத்தும் பாக்டீரியாவை அழித்துவிடும்.

சிலிகா என்ற அற்புதமான கனிமம் வெள்ளரிக்காயில் உள்ளதால், அவை, நகங்கள்மற்றும் முடியை பளபளப்பா கவும் திடமாகவும் வைத்திருக்கும். மேலும் அதிலுள்ள சல்பரும், சிலிகாவும் முடியின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருக்கும். மேலும் தசை இணைப்புகளை திடமாக்கி மூட்டு ஆரோக்கியத்துக்கு துணையாக நிற்கும்.

வெள்ளரிக்காயை கேரட் ஜூஸ்உடன் சேர்த்து பருகும் போது, உடலில் யூரிக் அமிலத்தின் அளவு குறைவதால் கீழ்வாதத்திற்கும் நிவாரணம் கிடைக்கும்.

உடலில் உள்ள யூரிக் அமிலத்தின் அளவை குறைக்க வெள்ளரிக்காய் உதவுவதால், அவைசிறுநீரகத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

**சாதிக்.**

# ‘2021-ஆம் ஆண்டு விண்வெளிக்கு மனிதனை அனுப்புவோம்’ இஸ்ரோதலைவர் கே.சிவன் பேட்டி

பி.எஸ்.எல்.வி. சி43 ராக்கெட் மூலம் பூமியை கண்காணிக்கும் ‘எச்.ஒய்.எஸ்.ஐ.எஸ்.’ என்ற செயற்கைகோள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த 30 செயற்கை கோள்களை இஸ்ரோ வெற்றிகரமாக விண்ணுக்கு செலுத்தியது. இதனைத் தொடர்ந்து ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இஸ்ரோ தலைவர் கே.சிவன், நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

பி.எஸ்.எல்.வி. சி43 ராக்கெட் வெற்றிகரமாக தீர்மானிக்கப்பட்ட சுற்றுவட்டப் பாதையில் இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த ராக்கெட் மூலம் ‘எச்.ஒய்.எஸ்.ஐ.எஸ்.’ செயற்கைகோள் வெற்றிகரமாக விண்ணில் நிறுத்தப்பட்டுள்ளது. அதேபோல், வணிக ரீதியாக விண்ணுக்கு அனுப்பப்பட்ட 30 செயற்கை கோள்கள், வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப் பட்டுள்ளன. ‘எச்.ஒய்.எஸ்.ஐ.எஸ்.’ செயற்கைகோள், சண்டிகாரில் உள்ள ஆய்வு கூடத்தில் தயாரிக்கப் பட்டது. பூமி ஆய்வுக்காக மட்டுமே அனுப்பப்பட்டு உள்ளது.

இந்த செயற்கைகோளில் அதிநவீன கேமரா பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் புவிப்பரப்பின் மீது உள்ள பொருட்களை மிகத் துல்லியமாக அடையாளம் காண்பது இந்த செயற்கைகோளின் முதன்மை நோக்கமாகும். இந்த செயற்கை கோளை விவசாய மேம்பாட்டுக்கு முழுமையாகப் பயன்படுத்த முடியும். தொடர்ந்து, பிரெஞ்சு கயானாவில் இருந்து டிசம்பர் 5ஆம் தேதி அதிக எடை கொண்ட ஜிசாட் 11 என்ற செயற்கைகோள் விண்ணில் ஏவப்படுகிறது. பொதுவாக ஜி.எஸ்.எல்.வி. மார்க்3 ராக்கெட், 4 டன் வரையிலான செயற்கைகோள்களை மட்டுமே செலுத்தும் திறன் கொண்டது. ஆனால் ஜிசாட்11, 5.86 டன் எடை கொண்டது. அதனால் இந்த செயற்கை கோளை இங்கிருந்து விண்ணில் அனுப்ப இயலாது என்பதால் பிரெஞ்சு கயானாவில் இருந்து ஏவப்படு கிறது. அதைத்தொடர்ந்து, 20 நாள்களில் ஜி.எஸ். எல்.வி. ஜிசாட்7ஏ செயற்கைகோள் விண்ணில் ஏவப்படும். தொடர்ந்து, அடுத்த ஆண்டு சந்திராயன் 2 விண்ணில் ஏவப்படுகிறது.

இஸ்ரோ இதுவரை 20 நாடுகளைச் சேர்ந்த 270 செயற்கைகோள்களை வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தியுள்ளது. இது உலக அளவில் இஸ்ரோவுக்கு நன்மதிப்பை பெற்றுத் தந்துள்ளது. புவி வட்டப்பாதையில் இப்போது இஸ்ரோவின் 47 செயற்கைகோள்கள் தகவல் தொடர்புகள், புவி கண்காணிப்பு, அறிவியல் ஆய்வுகள், கடல்சார் ஆய்வுகள் போன்ற பயன்பாட்டுக்காக செயல்பட்டு வருகின்றன. ‘ககன்யான்’ விண்கலம் விண்ணுக்கு அனுப்புவதற்கான பணிகள் சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறது. ககன்யானுக்கு முன்னதாக ஆளில்லாத முதலாவது விண்கலம் 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. தொடர்ந்து மேலும் ஒரு விண்கலம் 2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் விண்ணில் செலுத்தப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மனிதர்கள் செல்லும் விண்கலம் விண்ணில் செலுத்தப்படுகிறது. தொடர்ந்து அடுத்த ஆண்டு, 12 முதல் 14 செயற்கைகோள் அதாவது 15 நாட்களுக்கு ஒரு ராக்கெட் வீதம் விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. விண்வெளி என்கிற சொத்தை இஸ்ரோ திறமையாக கையாண்டு தொலை உணர்வு(ரிமோட் சென்சிங்) சேவையை நாட்டுக்கு வழங்கி உள்ளது..



அறிஞர் அண்ணா அவர்களை நான் முதன் முதலில் சந்தித்தது ஒரு பொதுக்கூட்டத்தில், அது சென்னை எஸ்பிளனேட்டில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. கட்டடத்தில் நடந்தது. அந்தக் கூட்டத்துக்கு நான் தலைமை வகிக்கவும், அவர் பேசவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்தில் மாணவர்கள் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். அவர் பேசுவதைப் பற்றி நான் விமர்சனம் செய்ய வேண்டுமா என்ற கவலை எனக்கு இருந்தது. சாதாரணமாக நான் ஒரே கூட்டத்தில் சர்ச்சைகளை விரும்புவதில்லை.

இதுவரையில் நான் பேசுகின்ற எந்தக் கூட்டத்திலும் அத்தகைய சங்கடம் ஏற்பட்டதில்லை என்பது என்னுடைய பேரதிர்ஷ்டமாகும். ஆனால் அண்ணா அவர்கள் நான் ஒப்புக்கொள்ளாத சில விசயங்களைப் பற்றிப் பேசினால் நான் அதற்கு விடையளித்துத்தான் ஆக வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. நான் அதற்கு விடையளிக்க அவசியம் இருக்குமா என்றுகூட நினைத்தேன்.

ஆனால், அந்தக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் மாறுபட்ட கருத்து ஒன்றும் தெரிவிக்கவில்லை. நான் அவர் பேச்சைப்பற்றி விமர்சனம் செய்ய அவசியம் இல்லாமலும் போய்விட்டது. பின்னால் காஞ்சிபுரத் திலுள்ள பச்சையப்பன் கல்லூரி அபிவிருத்தி விசயமாகவும் நானும் அவரும் சேர்ந்து ஒரே மேடையில் பேசியிருக்கிறோம். அப்போதும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதில்லை. அவர் சட்டமன்ற உறுப்பினராக ஆன பிறகு அவர் எதிர்க்கட்சியில் இருந்தபோதும் எனக்கும் அவருக்கும் எப்பொழுதும் சுமூகமான உறவு தொடர்ந்து இருந்து வந்தது. நாங்கள் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வந்திருந்தோம். அது வெற்றிகரமாக நடைபெறுவதிலே அண்ணா அவர்களுக்கும் அக்கறை உண்டு.

அதுபற்றிக் கிராமங்களில் நான் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யும் போதெல்லாம் தனக்கும் அழைப்பு அனுப்பினார். வந்து கலந்து கொள்வதாகச் சொல்லி அவரும் கலந்து கொண்டார்.





# அறிஞர் அண்ணாவும் நானும்...! முன்னாள் தமிழக முதல்வர் பெரியவர் எம். பக்தவச்சலம் அவர்கள்!

*அவர் முதல்வரான பிறகும் கூட ஒருமுறை திட்டவட்டமாக அறிவித்தார். மதுவிலக்குத் திட்டம் சரிவர நடைபெறவில்லை என்றாலும் அதனால் ஏற்படக்கூடிய நட்டத்தை ஈடுசெய்வதற்கு மத்திய அரசு உதவி செய்யவில்லை என்றாலும் மதுவிலக்குத் திட்டத்தினால் அரசு வருமானம் குறையும் என்றாலும் அந்த நிலையிலும் நான் மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிடமாட்டேன் என்று உறுதியாகக் கூறினார்.*

*முதுகுளத்தூர்க் கலவரம் நடந்தபோது, அதை நான் சமாளிக்க வேண்டியிருந்தது. அதுபற்றி சட்டசபையில் எதிர்க்கட்சி விவாதம் நடத்தியது. நடைபெற்ற அந்தக் கலகத்தை, வன்முறைச் செயலை நான் எடுத்துக்கூறி விளக்கினேன். ஆனால், எதிர்க்கட்சி என்கிற முறையில் அவர்கள் அதைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருந் தார்கள். அண்ணா அவர்கள் அதுபற்றி உருக்கமாகப் பேசி நான் அவருடைய ஒரு பிள்ளையைப்போல் பாவித்து அவர் சொல்வதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார். நான் அதை ஏற்று அவர் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசை ஒருபக்கம் எனக்கு உண்டு என்றாலும், மற்றொரு பக்கத்தில் கடமை உணர்ச்சி ஏற்பட்டு ஒத்தக் கொள்ள முடியவில்லையே என்று கூறினேன். அதே மாதிரி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போதும் மாணவர்கள் அதில் கலந்து கொண்டார்கள். சமூக விரோதச் சக்திகளுக்குத் தங்கள் கட்சி பொறுப்பு இல்லை என்று அண்ணா தெரிவித்தார். அண்ணா அவர்களின் ஆதரவு வன்முறைச் செயல்களுக்கு இல்லை.*

*அரசியலைப் பொறுத்தமட்டில் தேர்தலில் அண்ணா அவர்கள் காஞ்சியில் நின்றபோது, நான் எதிர்த்துப் பேச வேண்டியிருந்தது. ஆனால், எப்போதும் அவர் என்னிடத்தில் சகஜமாகவே பழகி வந்தார். அண்ணா அவர்கள் ஆட்சி செய்தபோது, அவர்க்கிருந்த முக்கியமான கவலை, தவறு ஒன்றும் நேரக்கூடாது என்பது சட்டமன்றத்துக்குள் நுழை வதற்கு முன்பு, அவர் நாட்டின் ஒருமைப் பாட்டிற்கு எதிர்ப்பாக இருந்தபோதிலும், சட்ட மன்றத்தில் கலந்து கொள்ள முடிவு செய்த பிறகு அந்தப் போக்கை அடியோடு விட்டு விட்டார்கள்.*

*ராஜ்யசபையில் உறுப்பினராக இருந்தபோது அமைச்சர்களிடத்திலும் உறுப்பினர்களிடத்திலும் அறிஞர் அண்ணா அவர்கள் நல்ல முறையில் பழகி, பெயர் பெற்று வந்தார். அறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்படாமல், இன்னும் கொஞ்சகாலம் பதவியில் நீடித்திருந்தால், அது நாட்டிற்கு நலனை விளைவிப்பதாக இருந்திருக்கும்*

தொகுத்தளித்தவர், **பீமபெருமாள்.**

# புதிய வரலாறு படைத்த வித்தகர் பேரறிஞர் அண்ணா அவர்கள்!



1942இல் சிதம்பரம் எனப்படும் தில்லை நகரில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் சார் பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அக்காலத்தில் முசுலீம்கள் என்றாலே ஒரு வெறுப்புடன் பார்த்த காங்கிரசார் அவர்களைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்றுசாடுவதற்கு விரும்பி 'மீர்சாபர் பரம் பரை' என்று பேசி வந்த னர்.

அதேபோன்று, ஒரு நாளேட்டின் கட்டுரையிலும் தலையங்கத்திலும் 'மீர்சாபர்' என்னும் சொல்லையே பயன்படுத்தி முஸ்லீம்களை இழிவு படுத்தி வந்தனர்?

அது உண்மைக்கு மாறானது என்பதை விளக்க விரும்பிய அறிஞர் அண்ணா அவர்கள், அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் அக்காலத்தில் வரலாற்றுத் துறைப் பேராசிரியராக விளங்கிய, தமது முன்னாள் ஆசிரியர் சிக்கா என்னும் சீனிவாசாச்சாரியர் அவர்களது வரலாற்று நூலையே துணையாகக் கொண்ட சான்று காட்டி, "வங்காளத்தின் வரலாற்றில் சுராஜ் உட்டௌலா ஆட்சி செய்த காலத்தில், அந்நிய வெள்ளையர்களிடம் அந்த ஆட்சியைக் காட்டிக் கொடுத்த கெடுமதியாளன் 'ஓமிர்சந்து' என்னும் இந்து வேயன்றி, ஐமீர்சாபர் அல்லர்' என்று விளக்கி விவரித் துப் பேசினார்.

அன்று அங்கு கூடியிருந்த மாணவர்கள் அனைவருமே தேசிய மாணவர்கள், ஆசியர்கள் உட்பட அனைத்த மாணவர்களும் வியப்புற்று நின்றனர்.

தமது கருத்தை மாற்றாரையும் ஒப்பவைத்திடும் அந்தப் பேச்சின் ஆற்றலை என்னால் மறக்க முடியவில்லை. இவ்வாறு 'மாமனிதர் அண்ணா' என்ற தன்னுடைய நூலில் இனமானப் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் பக்கம் 113ல் பதிவு செய்திருக்கிறார்.

உண்மை வரலாறுகளை இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவருமே அறிந்து கொள்ள நிறைய நல்ல நூல்களைத் தேடிப்படிக்க வேண்டும். அப்போது தான் தவறான கருத்துகளுக்கு இடம் கொடுக்க அவசியம் நேராது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து, வேண்டுகோளும்கூட!

பீமபெருமாள்,
அண்ணாநகர், சென்னை.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு 25 நிபந்தனைகள் விதித்து, மீண்டும் இயங்க அனுமதிக்கலாம் என தேசிய பசுமை தீர்ப்பாயத்துக்கு நிபுணர் குழு பரிந்துரை செய்து அறிக்கை அளித்துள்ளது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை 1996ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்தது. இந்த ஆலையில் இருந்து வெளியேறும் கழிவுகளால் பொதுமக்களுக்கு புற்றுநோய் உள்ளிட்ட நோய்கள் ஏற்படுவதாகவும், சுற்றுச்சூழல் பெருமளவில் மாசுபடுவதாகவும் புகார்கள் எழுந்தன.

இந்த நிலையில், ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடக்கோரி கடந்த மே மாதம் 22ஆம் தேதி தூத்துக்குடியில் பெரிய அளவில் போராட்டம் நடைபெற்றது. அப்போது போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. அதில் 13 பேர் பலியானது, தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து, ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட தமிழக அரசு மே மாதம் 28ஆம் தேதி உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை எதிர்த்து டெல்லியில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் வழக்கு தாக்கல் செய்தது.

அந்த வழக்கை ஜூலை மாதம் 30ஆம் தேதி விசாரித்த தேசிய பசுமை தீர்ப்பாயம், தமிழக அரசின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்க மறுத்தது. ஆனால், நிர்வாக பணிகளை மேற்கொள்ள ஸ்டெர்லைட் நிர்வாகத்துக்கு ஆகஸ்டு 9ஆம் தேதி அனுமதி அளித்தது. மேலும், ஸ்டெர்லைட் ஆலையை ஆய்வு செய்வதற்கு மேகாலயா ஐகோர்ட்டின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி தருண் அகர்வால் தலைமையில் 3 பேர் கொண்ட குழுவை அமைத்து உத்தரவிட்டது. ஸ்டெர்லைட் ஆலையால் தூத்துக்குடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்யுமாறும் அந்த உத்தரவில் கூறப்பட்டு இருந்தது.

அதன்படி, நீதிபதி தருண் அகர்வால் தலைமையில் சூழலியல் விஞ்ஞானிகள் சதீஷ் சி.கர்கோட்டி மற்றும் எச்.டி.வரலட்சுமி ஆகியோர் அடங்கிய மூவர் குழு கடந்த செப்டம்பர் மாதம் தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைப்பகுதிக்கு சென்று நேரில் ஆய்வு செய்தது. தூத்துக்குடி பகுதியில் பொதுமக்களையும் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து அவர்களுடைய கருத்துகளையும் இக்குழு கேட்டு அறிந்தது. அக்டோபர் மாதத்தில் சென்னையில் இந்த குழு பல்வேறு




# ஸ்டெர்லைட் ஆலை மீண்டும் இயக்க அனுமதியா?

தரப்பினரிடம் விசாரணை மேற்கொண்டது. இவை அனைத்தின் அடிப்படையில் இந்தக் குழுவின் அறிக்கை தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் ஸ்டெர்லைட் வழக்கு டெல்லியில், தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தலைமை நீதிபதி ஆதர்ஷ்குமார் கோயல், உறுப்பினர் நீதிபதிகள் ரகுவேந்திர ரத்தோர், எஸ்.பி.வாங்டி, கே.ராமகிருஷ் ணன், நகின் நந்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. விசாரணை தொடங் கியதும், நீதிபதி தருண் அகர்வால் தலைமையிலான நிபுணர் குழு தாக்கல் செய்த அறிக்கை அடங்கிய 'சீல்' வைத்த உறை, தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தலைவர் ஆதர்ஷ் குமார் கோயல் அமர்வில் அனைவர் முன்னிலையிலும் திறக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் இறுதிப்பகுதியை தலைமை நீதிபதி ஆதர்ஷ் குமார் கோயல் வாசித்தார். அதில் கூறப்பட்டு இருந்ததாவது:

ஸ்டெர்லைட் ஆலை அமைந்துள்ள தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளுக்கு நிபுணர் குழு நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொண்டது. பொதுமக்கள், ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம், தமிழக அரசு, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், இந்த வழக்கில் இடையீட்டு மனுதாரர்கள் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் இந்தக்குழுவின் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு கீழ்க்கண்ட கருத்துகளை முன்வைக்க விரும்புகிறது. ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுமாறு தமிழக அரசு பிறப்பித்த உத்தரவை நியாயப்படுத்த முடியாது. இந்த ஆலை சீல் வைக்கப்படுவதற்கு முன்பு ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கு தங்கள் தரப்பு நியாயத்தை முன்வைக்க உரிய அவகாசம் எதுவும் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அந்த நிறுவனத்துக்கு தமிழக அரசு தரப்பில் நோட்டீஸ் எதுவும் அளிக்கப்படவில்லை. எனவே, ஸ்டெர்லைட் ஆலையை மூடுமாறு தமிழக அரசு பிறப்பித்த உத்தரவு இயற்கை நீதிக்கு எதிராக அமைந்துள்ளது.

ஆலையை மூடுமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் அதற்காக கூறப்பட்டுள்ள காரணங்களின் தன்மை, அத்தனை ஊறு விளைவிக்கும் வகையில் இல்லை. அந்த உத்தரவில் அளிக்கப்பட்டுள்ள காரணங்கள் அந்த ஆலையை நிரந்தரமாக மூடுவதற்கு எந்த வகையிலும் உகந்ததாக இல்லை. ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம், சுற்றுச்சூழல் தொடர்பாக உரிய நிபந்தனைகள், நெறிமுறைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை கடைப்பிடிக்க தவறியதாக இருந்தாலும் தமிழக அரசின் உத்தரவில் முன்வைக்கப்பட்டுள்ள எதுவும் இந்த ஆலையை நிரந்தரமாக மூடுவதற்கான நியாயமான காரணங்களாக அமையவில்லை. இந்த நிலையில், ஸ்டெர்லைட் ஆலை மீண்டும் உற்பத்தியை தொடங்க அனுமதிக்க வேண்டும் என்று தீர்ப்பாயம் கருதும் பட்சத்தில் காற்று, நிலத்தடி நீர், சுற்றுச்சூழல், திடக்கழிவு மேம்பாடு குறித்து இந்தக்குழு வழங்கும் 25 பரிந்துரைகளை நிபந்தனையாக முன் வைத்து அனுமதி வழங்கலாம். இவ்வாறு இந்த அறிக்கையின் இறுதிப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

தலைமை நீதிபதி ஆதர்ஷ்குமார் கோயல், இந்த அறிக்கையின் இறுதிப்பகுதியை வாசித்து முடித்ததும், ஸ்டெர்லைட் ஆலை தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல் அரிமா சுந்தரம் எழுந்து ஒரு கருத்தை முன்வைத்தார். அவர்,"இந்த விவகாரம் தொடங்கிய முதல் நாளில் இருந்தே இந்தஆலையை மூடுவதற்கு தமிழக அரசு பிறப்பித்த உத்தரவை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. எனவே அதனை உடனடியாக திறக்க வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் நாங்கள் தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறோம். இந்த ஆலையை மூடுவதற்கு போதுமான நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை என்று இப்போது இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் இறந்ததும் அதை காரணமாக வைத்து அரசியல்ரீதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று கூறினார்.

இதற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்து தமிழக அரசு தரப்பில் மூத்த வக்கீல் சி.எஸ்.வைத்தியநாதன் மற்றும் அரசு வக்கீல் ராகேஷ் சர்மா ஆகியோர் வாதிட்டனர். அவர்கள்,"எதிர் தரப்பு வக்கீல் கோர்ட்டில் அரசியல் சொற்பொழிவை ஆற்ற முயற்சிக்கிறார். இது மிகவும் தவறானது. இங்கு ஒரு சிறு பகுதியைத்தான் தீர்ப்பாயத்தின் தலைவர் வாசித்துக் காண்பித்தார். ஆனால் அறிக்கையில் உள்ளதை முழுவதுமாக தெரிந்து கொண்டது போல அவர் கூறுகிறார்.

தனியாக இவருக்கு இந்த அறிக்கை ஏற்கனவே கிடைத்துள்ளதா என்பதும் இப்போது கேள்விக்கு உரிய விஷயம். இந்த அறிக்கையின் நகல் எங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அந்த அறிக்கை மீது தமிழக அரசு தரப்பில் பதிலை தாக்கல் செய்ய அனுமதி வழங்க வேண்டும்" என்று கூறினர்.

அதைத் தொடர்ந்து, நிபுணர் குழு அறிக்கையின் நகலை இரு தரப்புக்கும் வழங்குமாறு தீர்ப்பாயத்தின் தலைவர் ஆதர்ஷ் குமார் கோயல் உத்தரவிட்டார். மேலும், இந்த அறிக்கை தொடர்பாக இரு தரப்பினரும் ஒரு வாரத்தில் தங்கள் பதிலை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டு விசாரணையை டிசம்பர் 7ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார். ●


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**



உயிர் நெல் காத்த உழவர்

# நெல் செயராமன்

அவர்களுக்கு

# முற்றம் மாத இதழ்

## அகவணக்கம் செலுத்துகிறது!

**பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாத்து வளர்ப்பதே அவருக்கு நாம் செய்யும் உளப்பூர்வ அஞ்சலியாகும்!**

– ஆசிரியர்

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

CINE MUSICIANS' UNION



எம்.பி.எஸ். இன் வழித்தோன்றல்
திரு. **தினா** அவர்கள்
(தலைவர்)



இசைக்கலைஞர்களின் தோழர்
திரு. **சாரங்கன்** அவர்கள்
(செயலாளர்)



நீ(நி)திக் காவலர்
திரு குருநாத் அவர்கள்
(பொருளாளர்)

# திரைப்பட இசைக் கலைஞர்கள் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் வாக்குரிமை தந்த சங்கத்தின் நிர்வாகிகளுக்கு நன்றி!

**- திரைப்பட இசைக்கலைஞர்கள்**